Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 18

ஞாயிற்றுக்கிழமை
14 டிசெம்பர் 2025

கார்த்திகை 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

## டிசெ. 18ஆம் திகதியன்று நாடாளுமன்ற விசேட அமர்வு

கொழும்பு, டிசெ. 14
பிரதமரின் கோரிக்கைக்கு அமைய எதிர்வரும் 18ஆம் திகதியன்று நாடாளுமன்றின் விசேட அமர்வு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

»15




இந்திய மீனவர்களின்

# அத்துமீறிய மீன்பிடிக்கு முற்றுப்புள்ளி வைப்போம்

உடன் நடவடிக்கை என ஜனாதிபதி அநுர உறுதி



மன்னார், டிசெம்பர் 14

வடக்குக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பது உடனடியாக கட்டுப்படுத்தப்படும். இது உரிமை சார்ந்த பிரச்சினை - இவ்வாறு ஜனாதிபதி அநுர தெரிவித்தார்.

»15

## நோர்வே அரசால் 2 மில். டொலர்

விரிவு பக்கம்:-07

## சுற்றிவளைப்பு; 590 பேர் கைது

விரிவு பக்கம்:-07

## இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்ட வேண்டாம்

தமிழக மீனவர்களுக்கு இந்திய அரசு அறிவுறுத்தல்

சென்னை, டிசெ. 14
இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லைதாண்ட வேண்டாம். மீறினால் இலங்கைக் கடற்படையால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக மீனவர்களுக்கு இந்திய அரசால் கண்டிப்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

»14

## நிவாரணப் பணியில் தாமதம் வேண்டாம்!

மன்னார் மாவட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அநுர கண்டிப்பான உத்தரவு

மன்னார், டிசெ. 14
புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தத் தாமதமும் இல்லாமல் நிவாரணப் பணிகளை வழங்க வேண்டும். மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்பதில் எந்தத் தொய்வும் இருக்கக் கூடாது - இவ்வாறு ஜனாதி

»15

## நாளைமறுதினம் முதல் வடக்கில் மீண்டும் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14
தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் சிறிய அளவிலான காற்றுச் சுழற்சி யொன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இதனால், நாளைமறு

»15

## மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்றுக்காணி

வேலைத்திட்டம் ஆரம்பம்

விரிவு பக்கம்:-03

## வாழவேமுடியாத வீடுகளில் மன்னாரில் 70 குடும்பங்கள்

அவர்களின் நிலை தொடர்பில் ஜனாதிபதி விசேட அவதானம்

மன்னார், டிசெ. 14
மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட இடர் காரணமாக, 70 குடும்பங்களின் வீடுகளில் வாழ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் ஜனாதிபதி அநுர விசேட அவதானம் செலுத்தியுள்ளார்.
மன்னார் மாவட்ட செயலகத்தில் ஜனாதிபதி அநுரவில்

»15



## யாழ். பல்கலைத் துணைவேந்தர் தெரிவு; வெளிப்படைத்தன்மை குறித்து சந்தேகம்!

விண்ணப்பதாரிகள் மூவர் முறையீடு

யாழ்ப்பாணம், டிச. 14
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவுக்காக அண்மையில் இடம்பெற்ற மதிப்பீட்டுக் கூட்டத்தின் வெளிப்படைத் தன்மையைச் சவாலுக்கு உட்படுத்தி அதனைப் பகிரங்கப்படுத்துமாறு மூன்று விண்ணப்பதாரிகள் மேன்முறையீடுசெய்துள்ளனர்.

»15

முச்சந்தி முரளி

'இந்தமுறையாவது உந்த அத்துமீறலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைச்சினமெண்டால் புண்ணியமாப் போகும்'

## நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் அவசர சிகிச்சையில்!



யாழ்ப்பாணம், டிசெ. 14
வல்வெட்டித்துறை நகரபிதாவும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சிவாஜிலிங்கம் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். உடல்நலக் குறைவு காரணமாக அண்மைக்

»15

# சஞ்சீவி

மக்கள் [illegible] தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4284 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 12 19 55 69 |
| விசேட எழுத்து | C |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1351 |
| வெற்றி இலக்கினம் | மேஷ |
| வெற்றி இலக்கங்கள் | 08 15 41 43 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0310 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 3 9 7 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2390 |
| ஆங்கில எழுத்து | L |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 03 19 57 66 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6042 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 3 9 6 0 4 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2072 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 16 32 57 77 |
| விசேட எழுத்து | I |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0158 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 17 24 40 |

# துணைவேந்தர்களிடம் அதிகாரங்கள்; அரசின் செயல் ஜனநாயகவிரோதம்

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

**கொழும்பு,டிசெ.14**

**1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரும் அரசாங்கத்தின் நகர்வு, ஜனநாயகமற்ற முறையிலும் வெளிப்படைத் தன்மை இன்றியும் மேற்கொள்ளப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்மொழியப்பட்ட இந்தத் திருத்தம், பீடாதிபதிகள் மற்றும் துறைத் தலைவர்களை கல்வியாளர்கள் தேர்ந்தெடுக்கும் தற்போதைய நடைமுறையை நீக்கிவிட்டு, அந்த அதிகாரத்தை துணைவேந்தர் அல்லது ஆளும் சபை வசம் ஒப்படைக்கும் முக்கியமான மாற்றங்களை உள்ளடக்கியுள்ளன. பல்கலைக்கழக கல்வியாளர்கள், நிர்வாகிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் உட்பட அனைத்து பங்குதாரர்களுடனும் முறையான கட்டமைப்புசார் ஆலோசனைகளை மேற்கொள்ளாமல் ன மாற்றங்களைச் செய்வது தவறாகும்.

துணைவேந்தருக்கு இத்தகைய தனிப்பட்ட அதிகாரத்தை வழங்குவது அல்லது அதிகாரத்தை மத்தியமயமாக்குவது, ஏற்கனவே பதற்றங்களை எதிர்கொள்ளும் உயர்கல்வித் துறையில் கடுமையான பிரச்சினைகளை ஏற்படுத்தும். நாடாளுமன்ற அங்கீகாரத்திற்கு முன்னரே, பீடாதிபதிகள் நியமனத்தை நிறுத்துமாறு துணைவேந்தர்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் கடிதம் அனுப்பியுள்ளார். கட்டளைக்குச்சட்ட அடிப்படை இல்லை, இது தற்போதுள்ள சட்டத்திற்கு முரணானது.

இத்தகைய நடவடிக்கைகள் ஜனநாயக நடைமுறையின் வீழ்ச்சியையும், நாட்டை அதிகாரத்துவ முடிவெடுக்கும் திசையை நோக்கி நகர்த்துவதையும் காட்டுகின்றது. எனவே, அரசாங்கம் இந்தத் திருத்தச் செயல்முறையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து, அதிகாரத்தைக் குவிக்காமல் அல்லது பங்குதாரர்களின் பங்கேற்பைக் குறைக்காமல், ஆதாரங்களின் அடிப்படையிலான நியாயமான சீர்திருத்தங்களுக்காகப் பரந்த ஆலோசனைகளில் ஈடுபடவேண்டும் - என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0750 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 4 0 3 2 5 8 |

| Super Ball DLB | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3016 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கம் | 21 46 48 66 |

| சனிதா DLB | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 22 62 65 76 |
| வெற்றி வாரம் | 5177 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | 0846 |
| வெற்றி இலக்கம் | 16 33 36 |

| லக்ன ராசி DLB | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| | மிதுனம் |
| வெற்றி இலக்கம் | 04 24 41 61 |
| சீட்டிழுப்பு வாரம் | 4728 |

| KAPRUKA DLB | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| சுப்பர் இலக்கம் | 17 |
| வெற்றி இலக்கம் | 03 30 38 46 |
| வெற்றி வாரம் | 2192 |

| அத கோடிபதி DLB | |
|---|---|
| திகதி | 13.12.2025 |
| தினம் | சனிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 05 08 33 46 |
| வெற்றி வாரம் | 2842 |

# சட்டவிரோத சொத்துகள் விரைவில் அரசுடைமை!

கொழும்பு,டிசெ.14

இலங்கையில் திட்டமிட்ட குற்றவாளிகளால் சட்டவிரோதமான முறையில் ஈட்டப்பட்ட சொத்துகளைத் தடைசெய்வதற்கும், அவற்றை அரசுடைமையாக்குவதற்குமான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யூ. வுட்லர் தெரிவித்துள்ளார்.

அதன்படி கடந்த மற்றும் நடப்பு ஆகிய இரண்டு ஆண்டுகளுக்குள் 354 பவுண் தங்கம், 77 வாகனங்கள், 35 கோடி ரூபா பணம் மற்றும் நூறு கோடிக்கும் அதிக பெறுமதியான பல்வேறு சொத்துகளை அரசுடைமையாக்குவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதில் 2024ஆம் ஆண்டில் மாத்திரம் 150 பவுண் தங்கம், 64 வாகனங்கள், 6 கோடி ரூபா பணம் மற்றும் 61 கோடி ரூபா பெறுமதியான சொத்துகளுக்குத் தற்காலிகமாகத் தடைசெய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று, இந்த ஆண்டில் இதுவரை 204 பவுண் தங்கம், 13 வாகனங்கள், 67 கோடியே 78 இலட்சம் ரூபா பெறுமதியான காணி மற்றும் ஏனைய சொத்துகள், மற்றும் 18 வீடுகள் எனச் சட்டவிரோதமாக ஈட்டப்பட்ட பெருமளவிலான சொத்துகளை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# அனர்த்தங்கள் ஏற்படும்போது சர்வதேசம் உதவுவது வழமையே

## வஜிர தெரிவிப்பு




கொழும்பு,டிசெ.14

அனர்த்தம் ஏற்படும்போது சர்வதேசம் உதவுவது வழமை. கடன் வழங்கிய நாடுகள், கடன் பெற்ற நாடுகளை விழ விடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக நாடுகளிடம் நாம் கடன் வாங்கியுள்ளோம். நாம் விழுந்தால் சர்வதேசத்துக்கு கடனைச்செலுத்த முடியாமற்போகும். எனவே, கடன் வழங்கிய நாடுகள், கடன் பெற்ற நாடுகளை விழ விடாது. ரணில் விக்கிரமசிங்க எந்தச் சந்தர்ப்பத்திலும் சொத்துகளைக் குவித்தது கிடையாது. மக்களுக்கு அறிவை, அனுபவத்தை வழங்குவார். பணத்தைவிட இதுவே மிக முக்கியம்.

ரணில் விக்கிரமசிங்கவின் அனுபவத்தில் இருந்து இந்த அரசாங்கம் பயன் பெறவில்லை. இந்த அரசாங்கத்துக்கு அனுபவமும் இல்லை - என்றார். (ச-44)



அனர்த்தத்தினால் தடைப்பட்ட கொத்மலை வீதிகளை அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். சம்பந்தப்பட்ட வீதிகளை விரைவில் அபிவிருத்தி செய்வது குறித்தும் இதன்போது ஆராய்ந்தார்.

# சர்வதேச உதவிகளில் அரசு ஊழல் செய்யாது

## ஓமல்பே சோபித தேரர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.14

இலங்கைக்கு கிடைக்கப்பெறும் சர்வதேச உதவிகள் தேசிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் முறைகேடாகப் பயன்படுத்தப்படமாட்டாது என்ற நம்பிக்கை உள்ளது என்று கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தின்போதும் எமக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப்பெற்றன. எனினும், அவை மோசடியாகப் பயன்படுத்தப்பட்டன. அரசில்வாதிகள் முறைகேடாக நடந்துகொண்டனர். குறுக்கு வழியில் செயற்பாடுகள் இடம்பெற்றன.

கொரோனா நெருக்கடி காலகட்டத்திலும் மோசடிகள் இடம்பெற்றன. ஊசி விவகாரத்தில்கூட அமைச்சர் மோசடியில் ஈடுபட்டுள்ளார். தமது சொத்துகளைப் பெருக்கிக்கொண்டுள்ளார்.

கடந்த காலங்களில் இப்படியான கசப்பான அனுபவங்களே எமக்கு உள்ளன. எனினும், இந்த ஆட்சியின்கீழ் வெளிநாட்டு உதவிகள் குறுக்கு வழியில் பயன்படுத்தப்படமாட்டாது என நம்புகின்றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெங்கு அபாய ஏதுநிலை

## 30 குடியிருப்பாளர்களுக்கு 3 இலட்சம் ரூபா தண்டம்!


யாழ்ப்பாணம், டிசெ.14

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 30 ஆதனஉரிமையாளர்களுக்கு டெங்குநுளம்பு பரவும் ஏது நிலையைப் பேணிய குற்றச்சாட்டின் அடிப்படையில் 3 இலட்சம் ரூபா தண்டம் பருத்தித்துறை நீதிமன்றால் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர், அல்வாய் மற்றும் பொலிகண்டிப் பிரதேசங்களில் கடந்த வாரம் டெங்குக் கட்டுப்பாட்டு களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது நுளம்பு பெருகக்கூடியவாறான சூழலை வைத்திருந்தமை அடையாளம் காணப்பட்டது.

அதன்படி பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட 19 குடியிருப்பாளர்களுக்கும், அல்வாய் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 9 குடியிருப்பாளர்களுக்கும் பொலிகண்டி பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் இரு குடியிருப்பாளர்களுக்கும் எதிராக நகரசபையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகரான ப. தினேஷ், அல்வாய் பொதுச்சுகாதார பரிசோதகர் க.கிருஸ்ணரட்சகன் மற்றும் பொலிகண்டி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ம. நந்தகுமார் என்பவர்களால் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குற்றஞ் சாட்டப்பட்ட அனைத்து ஆதன உரிமையாளர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் அடிப்படையில் பருத்தித்துறை நீதி வான் நீதிமன்றினால் 30 ஆதன உரி மையாளர்களுக்கு தலா 10,000 ரூபா வீதம் 3 இலட்சம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டது. (ச-100,9)



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 135 குடும்பங்களுக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. புலோப்பளையைச் சேர்ந்த தொழிலதிபர் வை. சற்குணநாதனின் நிதிப்பங்களிப்போடும், புலம்பெயர்ந்து வாழும் பளையின் அன்பர்களின் உதவியோடும் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ச-4-19)

வடக்கு,கிழக்குக் கடற்பரப்பு

# புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது மீனவர்களின் வாழ்வாதாரம் தன்னிறைவு

ரவிகரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம்,டிசெ.14**

**தமிழீழ விடுதலைப்புலிகளின் காலத்தில் கடற்புலிகள் வடக்கு, கிழக்குக் கடற்பரப்பைத் தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இந்திய மீனவர்களின் எல்லை தாண்டல் அப்போது இருக்கவில்லை. அதனால் தாயகப்பரப்பிலிருந்த மீனவர்களின் வாழ்வாதாரம் தன்னிறைவு பெற்றிருந்தது என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகளுக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்காக கையேந்தி நிற்கும் நிலமையை இந்தப் போராட்டம் வெளிப்படுத்தியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் கடற்புலிகளின் தளபதி, இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் மற்றும் சட்டவிரோதமான செயற்பாடுகள் இல்லாமல் கடற்பரப்பை பூரண கட்டுப்பாட்டில் நேர்த்தியாக வைத்திருந்தார். விடுதலைப்புலிகளின் காலத்தில் வடபகுதி மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்யக்கூடியவகையில் கடற்றொழில் செயற்பாடுகளைமேற்கொண்டு வந்தனர். ஆனால் தற்போது இந்திய இழுவைப்படகுகள் மற்றும் சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளால் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்திய இழுவைப்படகுகளும், தென்னிலங்கையைச் சேர்ந்த சுருக்குவலை உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகளும் நிறுத்தப்படுமெனில், எமது மீனவர்களுடைய வாழ்வாதாரத்துக்கு அரசாங்கம் எதனையும் வழங்கத் தேவையில்லை. அத்துமீறல் செயற்பாடுகளால் எமது கடல் வளங்கள் அபகரிக்கப்படுகின்றன. எமது மீனவர்களின் வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்படுகின்றதுமீனவக்குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றன. எனவே இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்களை உடனடியாக கட்டுப்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இலங்கை மற்றும் இந்திய அரசுகள் முறையான விதத்தில் அணுகி இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகாணவேண்டும்-என்றார். (க-26,246)



## இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சி யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், டிசெ.14

அகில இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் மக்கள் தொடர்பாடல் தலைமையகம் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

பிரபல வர்த்தகர் அருள் ஜெயந்திரனைச் செயலாளர் நாயகமாகக் கொண்டு இந்தக் கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

456/1 மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்புறமாக குறித்த கட்சி அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

'இலங்கையை உலகத்தில் வாழ்வதற்கு சிறந்த நாடாக்குவோம்' என்ற இலக்குடன், அனைவருக்கும் சம உரிமை, ஜனநாயகமே முன்னுரிமை என்றவாறு மக்கள் சேவையை முன்னெடுக்கவுள்ளதாக அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் தெரிவித்தார். (ச-27)

## காரைநகரில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம்,டிசெ.14

காரை சலஞ்சேர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்தக் குருதிக்கொடை முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் குருதிக்கொடை முகாமில் குருதிக்கொடையாளர்கள் பங்கேற்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)



## 'லைசென்ஸ்' ஒப்பந்தம் இத்தாலியுடன் புதுப்பிப்பு

கொழும்பு,டிசெ.14

இத்தாலி மற்றும் இலங்கைக்கு இடையில் சாரதி அனுமதிப்பத்திரங்களை பரஸ்பரம் அங்கீகரிப்பதற்கான இருதரப்பு ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான ஒப்பந்தம் நேற்று இத்தாலியின் ரோம் நகரில் கையெழுத்திடப்பட்டது.

இலங்கை அரசாங்கம் சார்பில் இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர் சத்யா ரொட்ரிகோவும், இத்தாலி அரசாங்கம் சார்பில் வெளிவிவகார மற்றும் சர்வதேச ஒத்துழைப்புத் தொடர்பான பிரதி அமைச்சரும் அரச செயலாளருமான மரியா திரிபோடியும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்தச் சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தின் மூலம், இரு நாடுகளிலும் நிரந்தர வதிவிடத்தைப் பெற்றுக்கொண்ட நபர்கள் தமது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரத்தை மாற்றிக்கொள்ள வசதி அளிக்கப்படுகிறது. இந்த வசதியானது இத்தாலியில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் இலங்கையர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்றுக்காணி

வேலைத்திட்டம் ஆரம்பம்

கொழும்பு,டிசெ.14

'டித்வா' புயல் காரணமாகப் பாதிக்கப்பட்ட காணிகள் குறித்துக் கணக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்குக் காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம் அவதானம் செலுத்தியுள்ளது.

இதற்கமைய, மண்சரிவுக்கு உள்ளான காணிகளைப் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக மாற்றிய பின்னர், அக்காணிகளை மீண்டும் அளவீடு செய்யவேண்டும்.

சம்பந்தப்பட்ட காணிகள் தொடர்பான தகவல்கள் அந்தந்த மாவட்டச் செயலர்களிடம் கோரப்பட்டுள்ளது.

அதேவேளை சில குடியிருப்பாளர்கள் அரசகாணிகளில் அத்துமீறித் தங்கியிருப்பதுடன், அவர்கள் தொடர்பாகவும் இந்த நடவடிக்கையை முன்னெடுக்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறை நகரசபை பட்ஜெட் தோற்கடிப்பு

## சுயலாப அரசியலென உபதவிசாளர் குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம்,டிசெ.14**

**வல்வெட்டித்துறை நகரசபைக்கான 2026 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நேற்றுமுன்தினம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் 2 மேலதிக வாக்குகளால் அந்த பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டுள்ளது.**

பட்ஜெட்டுக்கு ஆதரவாக தமிழ்த் தேசியப் பேரவையின் 7 உறுப்பினர்கள் வாக்களித்தனர். தமிழரசுக் கட்சி, தேசிய மக்கள் சக்தி, ஈ.பி.டி பி.ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 9 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்திருந்தனர். இதையடுத்து 2 மேலதிக வாக்குகளால் பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டது. இதுதொடர்பில் உபதவிசாளர் நா.பத்மநாபன் தெரிவிக்கையில், நகராட்சிமன்ற அபிவிருத்தியைத் தடுக்கும் சுயலாப அரசியல் காரணங்களுக்காக தமிழரசுக் கட்சியினரும் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களும் எதிராக வாக்களித்து தோற்கடித்துள்ளனர். பட்ஜெட் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஞானவேல் வழிமொழிந்தும், தமிழரசுக் கட்சி உறுப்பினர் மயூரன் முன்மொழிந்தும் பட்ஜெட் சரியென ஏற்றுக்கொண்டிருந்தனர். அதன் பின்னர் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. பட்ஜெட் சரியென ஏற்றுக்கொண்டவர்களே எதிராக வாக்களித்துள்ளனர். இந்தச் செயற்பாடானது நகரசபையின் அபிவிருத்தியைத் தடுப்பதற்கான நோக்கில் சுயலாபக் காரணங்களுக்காக இடம்பெற்றுள்ளது. எனினும் இரண்டாவது தடவை பட்ஜெட்டைச் சமர்ப்பித்து, வல்வெட்டித்துறை நகரத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்குமான மக்கள் பணியைத் தொடர்வோம். - என்றார். (க-100)



## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்குச் சிகிச்சை

மன்னார்,டிசெ.14

டித்வா புயல் மற்றும் வெள்ளம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு, இலவசசிகிச்சை வழங்கும் நடமாடும் சேவை, மன்னார் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் கனியூட் பேபிதுரை வின்சன்ட் தலைமையில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலர் பிரிவுகளிலும் கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் பண்ணையாளர்கள் பெரும் இழப்பைச் சந்தித்துள்ளனர். ஆயிரக்கணக்கான கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

எஞ்சிய கால்நடைகளைப் பாதுகாத்து, பண்ணையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன், கால்நடை மருத்துவர்கள் 6 பேர் உள்ளடங்கலாக 6 குழுக்கள் வெவ்வேறு இடங்களில் நடமாடும் கால்நடை மருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மத்திய அமைச்சு, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், இலங்கை கால்நடை அரச மருத்துவர் சங்கம் ஆகியன இதற்கு அனுசரணை வழங்கியுள்ளன. (க-56)



## இடரிலிருந்து மீண்ட மாணவர்கள் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.14

டித்வா புயல் தாக்கத்தின்போது, புத்தளம் ஏ-12 வீதியில் பெருக்கெடுத்த கலாஓயா வெள்ளத்தில் சிக்குண்ட பேருந்திலிருந்து மீண்ட மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள், தமது மீட்பு நடவடிக்கைகளுக்குத் துரித நடவடிக்கை எடுத்தமைக்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் நேற்றுக் கடிதமொன்றையும் கையளித்தனர்.

மீட்புப் பணிகளுக்காக வருகை தந்த மூன்று கடற்படையினர் வெள்ளம் சூழ்ந்த ஆபத்தான சூழலில் 24 மணித்தியாலத்துக்கும் மேலாக எம்முடன் தங்கியிருந்து, வெள்ளத்தில் வீழ்ந்த சிலரையும் உயிருடன் மீட்டனர். இத்தகைய அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கடற்படை வீரர்களைச் சிறப்பிக்க வேண்டும். மிகவும் ஆபத்தான சூழலில், எவ்வித தாமதமுமின்றி மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவிய அனைத்துத் தரப்பினருக்கும், விசேடமாக மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தி, வழிநடத்திய ஜனாதிபதிக்கும் மனமார்ந்த நன்றிகள் என்று தெரிவித்து கடிதத்தைக் கையளித்தனர். (க-27)




## யாழ்ப்பாண மாணவர்கள் ஜோர்ஜியாவில் சாதனை

யாழ்ப்பாணம்,டிசெ.14

ஐரோப்பிய நாடான ஜோர்ஜியாவில், நடைபெற்ற UCMAS சர்வதேச மட்டப் போட்டியில், இலங்கையிலிருந்து பங்கேற்ற 58 மாணவர்கள் வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுள்ளனர்.

இவர்களில் திருநெல்வேலி, நல்லூர், சுண்டிக்குளி பயிற்சி நிலைய மாணவர்கள் 8 பேர் வெற்றிக் கிண்ணங்களைப் பெற்று, யாழ்.மண்ணுக்குப் பெருமை சேர்த்துள்ளனர். விநாயகிருஷ்ணன் கோபிகிருஷ்ணா, அஷ்வினி அனோஜன், அபூர்விகா ரகுநாதன், வினோஷ்கா பிரசன்னா, சுமணன் அப்ஷரன், கிருஷ்ணிகா நிதர்சன், மோகனகுமார் வேணுகானன், கேனுஜா மோகனகுமாரன் ஆகியோரே இவ்வாறு வெற்றிக்கிண்ணங்களைப் பெற்றுள்ளனர். (க-63)

## கண்டாவளைப் பாலத்தினூடான போக்குவரத்து பெரும் பாதிப்பு

முல்லைத்தீவு,டிசெ.14

முல்லைத்தீவு- பரந்தன் (ஏ - 35) பிரதான வீதியில், கண்டாவளைப் பாலத்தின் ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட கடும் மழையால், இந்தப் பாலமும் சேதமடைந்துள்ளது.

இதனால் பாலத்தினூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன், மக்கள் நாளாந்தம் போக்குவரத்தின் போது பெரும் இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர்.

இதன் நிலைமைகளை நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகன் நேற்று முன்தினம் நேரில் சென்று ஆராய்ந்தார். (க-இ)



## 25,000 ரூபா கொடுப்பனவு அடுத்தவாரம் வங்கிக்கணக்கில்

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 14 குடும்பங்களுக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகள் அடுத்த வாரம் அவர்களின் வங்கிக்கணக்குகளுக்கு அனுப்பிவைக்கப்படும் எனப் பிரதேச செயலர் எவ்.சீ.சத்தியசோதி தெரிவித்தார். இதேவேளை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான உலருணவுநிவாரணக் கொடுப்பனவுகளும் வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (ச-41-9)


பச்சிலைப்பள்ளி கோவில் வயல் கிராம அலுவலர் பிரிவில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 31 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உதவிப் பொருள்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. சாவகச்சேரியைச் சேர்ந்த சிறிதரன் என்பவரின் நிதிப்பங்களிப்பில் அவை கையளிக்கப்பட்டன. (ச-41-9)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 07 . 1945



மறைவு 12 . 12 . 2025

### ப.இ.கணேசராசா (J.P)

(ஓய்வுபெற்ற காசாளர், மொழிப்பெயர்பாளர்)

வல்லிபுரகுறிச்சியை பிறப்பிடமாகவும் காரைக்கலட்டி தும்பளை பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட ப.இ.கணேசராசா அவர்கள் கடந்த 12.12.2025 அன்று காலமானார்.

அன்னார் இராமலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கமலகுமாரி அவர்களின் அன்புக்கணவரும், நிசாந்தி, சுதர்சினி, அனுசா ஆகியோரின் அன்புத் தந்தையும், சி.ரமேஸ் (அமரர்-கனடா), சி.பிரபாகரன் (லண்டன்), இ.ஞானசம்பந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மாதுளன், யாதவன், சாரங்கன், தருணி, பிரவீன், குருபரன், கஜன், அஸ்விகா, அபினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.30 மணிக்கு கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
க.ஏ.அருள்செல்வம் (மைத்துனர்),
077 8862 522, 077 243 5711

(CS 30782) A

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் பதிப்புக்கள் அனைத்தையும்
செவ்வன அச்சிட்டுதரும்
BOSSCO நிறுவனத்தின் உரிமையாளர்
திரு. சிவச்சந்திரபோஸ் அவர்களின் புதல்வன்

### கௌதமன் சிவச்சந்திரபோஸ்

அவர்கள் இந்திய மண்ணில் கடந்த (11.12.2025) வியாழக்கிழமை அன்று அகால மரணம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்களும் ஊழியர்களும்

| | | | |
|---|---|---|---|
| S.V.M (Pvt) Ltd<br>122 Dam St,<br>Colombo 12 | S.V.என்ரபிரைஸ்<br>கரடிபோக்கு சந்தி,<br>கிளிநொச்சி. | S.V.முருகேசு<br>154 ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். | S.V.M Agencie(Pvt)Ltd<br>154, ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். |

(CR/46697) J-1

## மரண அறிவித்தல்

### கிருஸ்ணபிள்ளை இராசம்



தோற்றம் 14.12.1954 மறைவு 12.12.2025

மந்துவில் கிழக்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும், புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிஸ்ணபிள்ளை இராசம் அவர்கள் நேற்றுமுன்தினம் (12.12.2025) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்தா - கதிராசி தம்பதியரின் அன்பு மகளும், கிஸ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், ஜெனிக்கா, பிரதீபன், நிரூபன், சுஜீவன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனை விழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிங்க நகர்,
புலோலி தெற்கு,
புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்
மகன் - 077 697 1472
076 307 5472

(CS/30778) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**இடபம்:** பலவகைகளிலும் அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்திசெய்வீர்கள். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். விட்டுப்பிடித்துச் செல்லவும். உறவினர்கள்மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** சாதிக்கவேண்டும் என்ற துடிப்புடன் செயற்படுவீர்கள். ஆனாலும், புதிய முயற்சிகளில் நன்றாக சிந்தித்துச் செயற்படுவது நல்லது. தாயின் தேவைகளைப் பூர்த்தி செய்யும்வகையில் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**கடகம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கணவன் – மனைவிக்கிடையே மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. மற்றவர்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**துலாம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மூன்றாவது நபர்களின் தலையீட்டைத் தவிர்க்கவும். முக்கியமான முடிவு எடுப்பதில் அவசரம் வேண்டாம்.

**விருச்சிகம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இளைய சகோதரர்கள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். உறவினர்களால் செலவுகள் ஏற்பட்டாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும்.

**கும்பம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மீனம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். தந்தைவழி உறவினர்கள்மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். நீண்டநாள்களாக தொடர்பில் இல்லாத நண்பர் ஒருவர் தொடர்பு கொண்டு பேசுவது உற்சாகம் தரும்.



மானிப்பாய் பெரிய தம்பிரான் ஆலய நிர்வாகத்தினரால், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார். தம்பிரான் குடிதண்ணீர்த்திட்டம் மூன்றாண்டுகள் கடந்த நிலையில், இந்தத் திட்டத்தை வழங்கியதற்காக அவர் கௌரவிக்கப்பட்டார். (சு-17)



## தவம் தம்பிப்பிள்ளைக்கு யாழில் கௌரவிப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.14

சர்வதேச சத்திரசிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் புதிய தலைவராக சிங்கப்பூர் நாட்டில் அண்மையில் பொறுப்பேற்ற அமெரிக்க சான்போட் மருத்துவக் கல்லூரியின் உலகப் புகழ்பெற்ற சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சைப் பேராசிரியரும், மருத்துவ நிபுணருமான தவம் தம்பிப்பிள்ளைக்கு யாழ்ப்பாணத்தில் கௌரவிப்பு நிகழ்வு நடத்தப்பட்டது.

இவருக்கான கௌரவிப்பு நிகழ்வை யாழ்.போதனா மருத்துவமனைச் சமூகத்தினரும் யாழ்.பல்கலைக் கழகமும் இணைந்து யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடத்தின. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். சி.சிறிசற்குணராஜா, யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி இ.சுரேந்திரகுமாரன், யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி, யாழ்.பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-41-66)

## குட்டியப்புலம் பாடசாலை மாணவிக்கு தேசிய விருது

யாழ்ப்பாணம்,டிசெ.14

இளம் விவசாய விஞ்ஞானிப் போட்டியில், குட்டியப்புலம் அ. த . க. பாடசாலையில் தரம் 9 இல் கல்விகற்கும் கருணா நதீனா தேசிய மட்டத்தில் தங்க விருதைப் பெற்றுள்ளார்.

இலங்கை விஞ்ஞான வளர்ச்சிச் சங்கத்தின் ஒத்துழைப்புடன், மாணவர்களின் விஞ்ஞான மற்றும் விவசாயச் செயற்பாட்டு அறிவை மேம்படுத்தும்முகமாக, கல்வி அமைச்சால், கடந்த 4 வருடங்களாக தேசிய ரீதியில் இந்தப் போட்டி நடத்தப்பட்டுவருகின்றது.

இம்முறை இடம்பெற்ற போட்டியில் வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட சிறிய பாடசாலையில் கல்வி கற்கும் குறித்த மாணவி சாதனை படைத்துள்ளார். மாணவிக்கான விருது, கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தின் லோட்டஸ் அரங்கில் இடம்பெற்ற, இலங்கை விஞ்ஞான வளர்ச்சி சங்கத்தின் 81 ஆவது வருடாந்த அமர்வில் வழங்கப்பட்டது. (க-159)



## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.14

சாவகச்சேரிப் பிரதேசசபையின் கைதடி பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழா கைதடி மேற்கு அன்னை இரத்தினம் மணிமண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் பொ.குகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணியும் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினருமான கே.சயந்தனும், சிறப்புவிருந்தினராககைதடிகலைவாணிவித்தியாலய அதிபர் க.நடேஸ்வரனும், கௌரவ விருந்தினராக கைதடி முன்னாள் பொதுநூலகரும் ஓய்வுநிலை நூலகருமான திருமதி கோ.சிவபாக்கியம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது கரங்கள் சஞ்சிகை வெளியீடு, எழுத்தாளர் கௌரவிப்பு இலவச அங்கத்துவம் வழங்கல், இல்லங்களில் நூலகச் செயற்பாட்டிற்கான ஊக்குவிப்பு, நூலகத்தை அதிக நேரம் பாவிப்பவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ச-41-159)

## 'பாரதியும் நானும்' கவிதைநூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.14

பாரதியாரின் பிறந்தநாளை முன்னிட்டு கோவையூர்க் கவிஞர் திருமகள் குளோரியா ரூபாவின் 'பாரதியும் நானும்' எனும் கவிதைநூல் வெளியீட்டு நிகழ்வு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. பாரதியார் கவிதைகள் செலுத்திய செல்வாக்குகளைப் பற்றி வெண்பா மற்றும் விருத்தப்பாக்களில் இந்த நூல் அமையப்பெற்றுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி பிரதம விருந்தினராகவும், அமலமரித் தியாகிகள் சபையின் வடமாகாண முதல்வர் அருட்தந்தை ஜெயந்தன் பச்சேக் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். நூலின் வெளியீட்டுரையை அருட்தந்தை செ. அன்புராசாவும், நயப்புரையை கவிஞரும் விரிவுரையாளருமான வேல். நந்தகுமாரும் ஆற்றுவர். (ச-41-27,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# பேரிடரும் காரிருளும் சூழ்கையில்...!

டித்வா புயலால் ஏற்பட்ட வெள்ளப்பேரிடரில் முத்து ஐயன்கட்டு குளத்தால் பெருக்கெடுத்து ஓடிய காட்டாற்று வெள்ளத்தின் பின்னர், குளத்தின் நீரோட்டப் பாதையில் அவதானிக்கப்பட்டிருந்த கட்டுமானச் சிதிலங்கள் ஆதிகால விகாரைக்குரியவை என்று அறிவித்திருக்கின்றது தொல்லியல் திணைக்களம். இதனால், அந்தப் பகுதியில் கட்டுமானங்கள் உள்ளிட்ட எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படக்கூடாது என்றும் அந்தத் திணைக்களத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் இலங்கையின் நீதிக் கட்டமைப்பும், அரச உயர்மட்ட அதிகாரிகளும், தமிழ்த் தேசிய மக்கள் பிரதிநிதிகளும் கூடுதலான கவனத்தை அதிவிரைவாகச் செலுத்தவேண்டிய அவசியம் உள்ளது.

அருவருக்கத்தக்க இனவாதத்தாலும் மதவாதத்தாலும் குருதிச் சகதி பெருக்கெடுத்தோடிய இலங்கைத் தீவில், இன்னொரு போர் தோன்றுமாக இருந்தால், அதற்கான மூலகாரணிகளில் ஒன்றாக முல்லைத்தீவு-குருந்தூர்மலை நிச்சயம் இருக்கும். அந்த ஆபத்தம்சங்கள் அனைத்தும் நிறைந்ததாகத்தான் குருந்தூர்மலையில் பௌத்த பேரினவாதம் மீண்டும் மீண்டும் தன் வெறியாட்டத்தை தொடர்ச்சியாக நிகழ்த்தி வருகின்றது. குருந்தூர்மலையால் முல்லைத்தீவு மாவட்டம் அதன் இயல்பான அமைதியை இழந்துள்ள நிலையில்தான், தற்போது முத்து ஐயன்கட்டிலும் அத்தகையதொரு மதப்பதற்றத்தை ஏற்படுத்துவதற்கான நகர்வுகளை, பேரிடரும் காரிருளும் நிறைந்த இக்காலத்தில் மேற்கொண்டிருக்கின்றது தொல்லியல் திணைக்களம்.

உலக நாடுகள் அனைத்திலும் தொல்லியல் திணைக்களங்கள் இருக்கின்றன. தொல்பொருள் அடையாளங்களை மீட்டெடுப்பதும், அவற்றுக்கு உயிரோட்டம் கொடுப்பதும்தான் அந்தந்த நாடுகளில் தொல்லியல் திணைக்களத்தின் பிரதான கடமையாக இருக்கின்றது. ஆனால், இலங்கையில் இடம்பெறுவது என்னமோ முரணான காட்சிகள்தான். 'பௌத்தத்துக்கு எங்கெல்லாம் காணி பிடிக்க முடியுமோ, பௌத்தத்தை எங்கெல்லாம் நிறுவ இயலுமோ அங்கெல்லாம் முன்களப் பணியாளராகச் செயற்படுவதே' இங்குள்ள தொல்லியல் திணைக்களத்தின் பணியாயிற்று. 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பதுபோல், தொல்லியல் திணைக்களத்தைத் தொடர்ந்து, இனி தேரர்கள் அணிவகுப்பார்கள். ஈற்றில் விகாரைகள் எழும்பும்.


முத்துஐயன்கட்டில்அவதானிக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே விகாரைக் கட்டுமானம்தான் என்றால், அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், எத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றி, அது விகாரைக் கட்டுமானம்தான் என எண்பிக்கப்பட்டது என்ற விஞ்ஞானபூர்வ - வரலாற்று ரீதியிலான விளக்கங்கள் வழங்கப்படவேண்டும். நீதிமன்றத் தடையுத்தரவு நடைமுறையில் இருக்கத்தக்கதாக இதே முல்லைத்தீவின் குருந்தூர் மலையில் விகாரைக் கட்டுமானங்கள் அமைக்கப்பட்டன. எனவே, நீதிமன்றத்தில் நம்பிக்கை வைத்து முத்து ஐயன்கட்டு விவகாரத்துக்காக நீதிமன்றப் படியேறினாலும், நீதியின் உத்தரவுகள் எவ்வளவு தூரம் செவிசாய்க்கப்படும் என்ற பயம் ஏற்படுவது இயல்பாகின்றது. ஆதலால், ஆரம்பப் புள்ளியிலேயே தீர்வைத் தேடக்கூடிய நகர்வுகளை தமிழர் தரப்பு கண்டுகொள்ள வேண்டும். அதற்கு, அரசாங்கமும் இதய சுத்தியுடன் வினையாற்ற விளைய வேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொருநாளும் புதிதாக ஒன்றைக் கற்றுக்கொள்வது அறிவு. ஒவ்வொருநாளும் ஏதாவது ஒன்றை விட்டுவிடுவது ஞானம்.

- எமெர்சன் -



# அரச ஊழியர்களுக்கு பண்டிகை முற்பணம்!

**கொழும்பு,டிசெ.14**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு 4 ஆயிரம் ரூபாவுக்கும் மிகைப் படாத விசேட முற்பணத்தை வழங்குவது தொடர்பான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.**

பொதுநிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோகபண்டாரவினால் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு இந்தச் சுற்றுநிருபம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு இந்த முற்பணம் வழங்கப்படுவது வழக்கமாகும்.

இதற்கமைய, 4,000 ரூபாவுக்கு மிகைப்படாத இம்முற்பணக் கொடுப்பனவானது ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, அவ்வருடம் பெப்ரவரி மாத இறுதித் தினத்துக்குள் நிறைவு செய்யப்படவேண்டும்.

இந்த முற்பணத் தொகையானது 8 சதவீத வருடாந்த வட்டியுடன், 10 சமமான மாதத் தவணைகளில் அறவிடப்படவேண்டும் எனப் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# பணவனுப்பல் அதிகரிப்பு

கொழும்பு,டிசெ.14

இலங்கைக்குக் கிடைத்த வெளிநாட்டுப் பணயனுப்பல் கடந்த நவம்பர் மாதத்தில் 673.4 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஜனவரி முதல் நவம்பர் வரையான காலப்பகுதியில் மொத்த பணயனுப்பல் 7.19 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 20.7 சதவீத வளர்ச்சியாகும் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

# சுற்றிவளைப்பு; 590 பேர் கைது

கொழும்பு,டிசெ.14

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 590 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. மேலும், 23 பேர் குற்றங்களுடன் தொடர்புடையவர்களாக மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதேநேரம், கைதுசெய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 318 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 163 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)



# பண்டிகைக் காலத்தில் விசேட பாதுகாப்பு!

கொழும்பு,டிசெ.14

பண்டிகைக்காலத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதற்கமைய, 2,500 பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் எப்.யு. வுட்லர் தெரிவித்துள்ளார். மக்கள் அதிகம் கூடும் இடங்களில் விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)





# நோர்வே அரசால் 2 மில்லியன் டொலர்

கொழும்பு,டிசெ.14

'டித்வா' சூறாவளியினால் ஏற்பட்ட பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு நோர்வே சுமார் 2 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளதாக அந்நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் அஸ்முன்ட் ஒக்ரஸ்ட் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்கான இருப்பிடம், உணவு, சுகாதாரம் மற்றும் மீளக்கட்டியெழுப்பல் வசதிகள் என்பன முறையாகச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதும் இன்றியமையாததாகும்' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

நாளை திங்கட்கிழமை– கார்த்திகை 29
15.12.2025
சுபநேரம் : 12.21 - 01.51
ராகுகாலம் : 07.51 - 09.21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பளை இத்தாவில் வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு வழங்கவென 40 சிறுவர் கதை நூல்கள் கடந்த வியாழக்கிழமை பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன. புலம்பெயர் நாட்டில் வதியும் இத்தாவிலைச் சேர்ந்த பழையமாணவி குகராசா சின்னம்மா தனது மகளின் பிறந்ததினத்தை முன்னிட்டு தனது சகோதரன் ஊடாக அதிபரிடம் இந்தப் புத்தகங்களைக் கையளித்தார். (ச-41-9)



யாழ்.வர்த்தக சங்கத்தினால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட யாழ்.மக்களுக்கு வழங்குவதற்கென ஒரு தொகுதி பாய், படுக்கை விரிப்புகள் மற்றும் நுளம்பு வலைகள் என்பன யாழ். மாவட்டச் செயலரிடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன. (ச-41-27)

## இடரால் பாதிக்கப்பட்டோருக்கு நடமாடும் சுகாதார சேவைகள்

மன்னார்,டிசெ.14

வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, மன்னார் சுகாதார சேவைகள் திணைக்களத்தால் நடமாடும் சுகாதார சேவைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. வெள்ள இடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்படும் தொற்றுநோய்கள் மற்றும் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் நோய்களை விரைவாகக் குணப்படுத்தும் நோக்குடனும், சகல கிராமங்கள் தோறும் சுகாதார நடமாடும் சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (க-60)





## யாழ்.பல்கலையில் நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், டிசெ.14

1961ஆம் ஆண்டு இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்பான வரலாற்றுப் பதிவுகளைக் கொண்ட முதலாவது நூலான 'அமைதிவழிப் போராட்டமும் அறவழிச் சிந்தனையும்' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடப் பேராசிரியர் ஏ.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இதுவரை வெளிவராத வரலாற்றுத் தகவல்களுடன் சுப்பையா இரத்தினேஸ்வரன், மழவராயன் விஜயபாலன் ஆகியோரால் மீள்பதிப்பாக இந்த நூல் தொகுக்கப்பட்டுள்ளது. வெளியீட்டு விழாவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன், யாழ்ப்பாணம் தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் பேரருட்கலாநிதி எஸ்.ஜெபநேசன், அரசியல், சமூக ஆய்வாளர் ம.நிலாந்தன், நாடாளுமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் முன்னாள் செயலாளர் இ.பேரின்பநாயகம், அரகலய போராட்டத்தின் செயற்பாட்டாளர் எஸ். ஜானக்க வியன்வல, செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் பிரதம அறங்காவலர் சா.செ.இளங்கோவன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரைகள் ஆற்றினர். (ச-66)



டித்வா புயலினால் பாதிப்பிற்குள்ளான நெடுந்தீவுப் பிரதேச மக்களுக்கான உதவிப்பொருள்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. பிரதேச செயலர் என்.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.இளங்குமரன், நெடுந்தீவுப் பிரதேசசபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-41-9)

இலங்கையில் வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா புதுடில்லி கலை இலக்கியப் பேரவையின் செயலாளர் பா.குமார் தமிழ் அமைப்பாளர்களுடன் இணைந்து நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளார். மன்னார்,யாழ்ப்பாணம், வவுனியா,முல்லைத்தீவு, மட்டக்களப்பு, கண்டி, பண்டாரவளை, அப்புத்தளை, பதுளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களை நேரடியாகச் சந்தித்து இந்த உதவிகளை வழங்கினார். (க-இ)



மன்னார் உப்புக்குளம், கொந்தைப்பிட்டி ஜென்னத் நகர் ஆகிய கிராமங்களில் இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனால் அத்தியாவசியப்பொருள்கள் வழங்கப்பட்டன. மன்னார் மாவட்டத்தின் நானாட்டான்அறுவைக்குண்டுப் பகுதி மக்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினரால் அத்தியாவசியப்பொருள்கள் வழங்கப்பட்டன. (க-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## Exciting Job Opportunity for Accountancy Professionals! Join a leading UK Accounting Firm now expanding its team in Jaffna!

**Our established Jaffna branch is seeking additional staff as We expand our operations and enhance our dynamic team.**

**Candidate Educational Qualifications and Skills Required:**



- An undergraduate degree in the accountancy field.
- A related professional field.
- Experience in a UK accountancy practice is desirable.
- Proficiency in both English and Tamil languages.

Wages : We offer a competitive salary package based on qualifications and experience.
Office Location : Jaffna,Sri Lanka
Working Hours : Monday to Friday - Shifts available: 10 am to 7 pm or 12 pm to 9 pm.
How to Apply : Please send your CV and cover letter to agaaccrecruitments@gmail.com
Application Deadline : 21.12.2025

(CS/60132) J-1

## கட்டடம் குத்தகைக்கு தேவை

யாழ் அபான்ஸ் வாடிக்கையாளர் சேவை நிறுவனத்திற்கு 1500 - 2000 சதுர அடி பரப்பளவு கொண்ட வணிக நோக்க கட்டிடம் நீண்ட கால குத்தகைக்கு அவசரமாக தேவை.

- காங்கேசன்துறை, பலாலி, ஊர்காவல்துறை பிரதான வீதியில், நகரில் இருந்து 8KM தூரத்தில் விருப்பத்தக்கது.
- முகப்பு கிழக்கு/ வடக்கு நோக்கி இருக்க வேண்டும்.
- வாகன தரிப்பிட வசதி தேவை

**70 654 7917, 70 687 9509**

(CS/60153) J-1

## மணமகள் தேவை

யாழ் இந்து (K) 1981ம் ஆண்டு பிறந்த அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் 4இல் சூரியன் செவ்வாயுள்ள நட்சத்திரம் பூசம் இரண்டாம் பாதம் உடைய சட்டப்படி விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:-
**077 311 6202**

(CS/60164) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்சரிவு அபாய பகுதிகளாக நிலப்பரப்பில் 30 % அடையாளம்

## தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.14
நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 30% மண்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது 14 மாவட்டங்கள் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயத்தைக் கொண்டிருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத் தகவல்திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தற்போதைய வானிலை மற்றும் அனர்த்த நிலைமைகள் குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட புவியியலாளர் கலாநிதி வசந்த சேனாதீர மேலும் தெரிவிக்கையில்,

மண்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ள பகுதிகளில் நாட்டின் மொத்த சனத்தொகையில் 34% மக்கள் வசிக்கின்றனர். அந்த நிலப்பரப்பு சுமார் 20,000 சதுர கிலோமீற்றர் வரை பரந்துள்ளது.

'டித்வா' புயலைத் தொடர்ந்து பெய்த கடும்மழையினால் மண்சரிவு ஏற்படக் கூடிய இடங்களைப் பரிசோதிக்குமாறு 2,710 கோரிக்கைகள் கிடைத்துள்ளன. 589 இடங்கள் இதுவரை பரிசோதிக்கப்பட்டு முடிந்துள்ளன. பாதிக்கப்பட்ட இடங்கள் தொடர்பாகப் பெறப்பட்ட செய்மதி புகைப்படங்களின் படி, 10 மீற்றருக்கும் அதிகமாக மண்சரிவு ஏற்பட்ட 1,241 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் வீடுகளுக்குப் பாதிப்பில்லாத 919 இடங்களும், வீடுகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்திய 322 மண்சரிவுச் சம்பவங்களும் பதிவாகியுள்ளன. கடந்த காலங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது, மண்மேடுகள் சரிந்து விழுந்தமையாலேயே அதிகளவான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. அது குறித்து மக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்கவேண்டும்- என்றார். (ச-இ)

### அறைகள் வாடகைக்கு

யாழ் நகருக்கு அருகாமையில் ஆண்களுக்கான அறைகள் வாடகைக்கு உண்டு.
(வைத்தியர்கள், பணி புரிபவர்கள் விரும்பத்தக்கது) (CS/46635) J-1
தொடர்பு:- 077 304 5997

### வேலையாட்கள் தேவை

சவுதிஅரேபியாவில் தொழிற்சாலை தொழிலாளர்கள் தேவை.
மாத சம்பளம், இரண்டு வருட சேவை ஒப்பந்தம். 25நாட்களில் பயணம் செய்யலாம். உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு:-
077 457 3783
(CS/46696) J-1

### காணி விற்பனைக்கு

தொண்டமனாறு, பெரியமலைஏற்றம்,
கே.கே.எஸ் வீதியில்
5.67 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
Whatsapp : +44 793 939 2967
+94 712 590 275

### ஏல விற்பனைக்கு

வெல்டிங் வேக்சொப்பிற்கு தேவையான பொருட்கள் மற்றும் Auto என்பன ஏலவிற்பனைக்கு உண்டு.
ஏலம் தொடர்பான திகதி, நேரத்திற் மற்றும் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
இடம் :- அளவெட்டி கிழக்கு, கும்பளை.
தொடர்புகளுக்கு:-
077 544 5972
(CS/60166) J-1

### மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 110 ரூபாய்
077 334 1281
(CR/46692) J-1

### மலிவு விற்பனை

இன்றுமுதல் 5 நாட்களுக்கு பூங்கன்றுகள் மட்டும் ரூபா 100/- 20% விலை குறைவாக விற்பனை செய்யப்படும்.
"யாழ் சிற்றி பாம்"
755, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணம்.
(CS/60190) J-1

### உடனடி பணியாளர் தேவை. எங்கள் நிறுவனத்திற்கு.

ARYA KSHATHRIYA HOLDINGS

சந்தை படுத்துபவர் (MARKETING EXECUTIVE - 2 PERSON MALES)
- நல்ல தொடர்புத்திறன் அவசியம்
- அனுபவம்/அனுபவமற்றவர்களும் சேர்க்கப்படுவர்.

சாரதி (DRIVER)
- செல்லுபடியாகும் லைசென்ஸ் (LICENSE) அவசியம்
- அனுபவம் உள்ளவர்கள் முன்னுரிமை.

தொழில்நுட்பவியலாளர் (TECHNICIAN - 2 PERSON MALES]
- தொடர்புடைய தொழில்நுட்ப அறிவு
- அனுபவம்/ அனுபவமற்றவர்களும் சேர்க்கப்படுவர்.

சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.
மேலதிக தகவல்களுக்கு :-
0775566751 / 0760971013
PLACE :- NO.14,CONVERT ROAD, JAFFNA.
(CS/60161) J-1

### இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு - 60

* Diploma in English / Spoken English
* Diploma in ICT
* Diploma in Artificial Intelligence/ Data Science
* Diploma in Psychology & Counseling
* Diploma in Political Science

● காலம்: 03 மாதங்கள் ● பெறுமதிமிக்க சான்றிதழ்
ஆரம்பம் : 20.12.2025
IPS to your future
Thirunelvely
TP:074 234 9120

### www.EQMarriageService.com

CALL 076 664 9401
ஒன்லைன் திருமணசேவை
Ensured Quality Lanka (Pvt) Ltd
Bambalapity, Colombo 04

| மணமகன் தேவை | மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|---|
| 1995, இந்து, சித்திரை<br>பட்டதாரி<br>MARKETING MANAGER<br>சொந்த இடம்: கரவெட்டி<br>மணமகள் பதிவு இல:11165 | 1995, இந்து, அஸ்வினி<br>பட்டதாரி<br>MANAGEMENT ASST.<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகன் பதிவு இல:11245 | 1993, இந்து, ரோஹினி<br>பட்டதாரி<br>ENGINEER, AUSTRALIA<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகள் பதிவு இல:11599 |
| 1996, இந்து, பூரட்டாதி<br>பட்டதாரி<br>ACCOUNTANT, U.K<br>சொந்த இடம்: புங்குடுதீவு<br>மணமகள் பதிவு இல:11177 | 1986, இந்து, கேட்டை<br>பட்டதாரி<br>GRAPHIC DESIGNER<br>சொந்த இடம்: புங்குடுதீவு<br>மணமகன் பதிவு இல:11246 | 1995, இந்து, பூரம்<br>பட்டதாரி<br>SOFTWARE ENGINEER<br>சொந்த இடம்: மயிலிட்டி<br>மணமகள் பதிவு இல:11219 |
| 1996, இந்து, பரணி<br>பட்டதாரி<br>ARCHITECT<br>சொந்த இடம்: துன்னாலை<br>மணமகள் பதிவு இல:11341 | 1992, இந்து, அஸ்வினி<br>பட்டதாரி<br>TEACHER<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகன் பதிவு இல:11689 | 1996, இந்து, ஆயிலியம்<br>பட்டதாரி<br>ENGINEER, SWISS<br>சொந்த இடம்: யாழ்ப்பாணம்<br>மணமகள் பதிவு இல:11183 |
| 1996, இந்து, உத்தரட்டாதி<br>பட்டதாரி<br>TEAM LEADER, CANADA<br>சொந்த இடம்: கிளிநொச்சி<br>மணமகள் பதிவு இல:11442 | 1999, இந்து, அஸ்வினி<br>பட்டதாரி<br>ASST. ACCOUNTANT<br>சொந்த இடம்: மயிலிட்டி<br>மணமகன் பதிவு இல:11694 | 1988, இந்து, அனுசம்<br>பட்டதாரி<br>DEVELOPMENT OFFICER<br>சொந்த இடம்: மல்லாகம்<br>மணமகள் பதிவு இல:11242 |
| 1992, இந்து, மூலம்<br>பட்டதாரி<br>OPERATIONS ANALYST<br>சொந்த இடம்: அளவெட்டி<br>மணமகள் பதிவு இல:11217 | 1997, இந்து, கேட்டை<br>பட்டதாரி<br>ENGINEER<br>சொந்த இடம்: கோப்பாய்<br>மணமகன் பதிவு இல:11763 | 1987, இந்து, ஸ்வாதி<br>பட்டதாரி<br>CIVIL ENGINEER, LONDON<br>சொந்த இடம்: உசன்<br>மணமகள் பதிவு இல:11274 |

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே CALL 076 664 9401

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 10.09.1939 மறைவு 19.11.2022

## திலகமணி தவமணிநாயகம்

திதி: கார்த்திகை மாத தசமி

ஆண்டுகள் மூன்று கடந்ததம்மா
நீர் மறைந்த நாளிலிருந்து
மூன்றல்ல மூவாயிரம் ஆண்டுகள்
கடந்தாலும்
ஆறுமோ எம் துயரம்
காலமெல்லாம் உம் நினைவுகளுடன்
வாழ்கின்றோம்.

கோணப்புலம் ஒழுங்கை, மல்லாகம்.
பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
(cs 1920) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவலைகள்

இருபத்தெட்டாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் சின்னத்தம்பி சின்னையா**
(ஓய்வுநிலை தபாலதிபர்
(Radio Officer - Foreign Ship)
**திதி: துதியை**

ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் திருமதி சின்னையா சரோஜினி**
**திதி: தசமி**

நாளெல்லாம் நலமாய் வாழ காலமெல்லாம்
கரம் தந்த வாழ்வின் இருதீபங்களே!
நித்தம் உங்களைத் தேடித் தேடி அழுகின்றது மனசு
சித்தம் இரங்கும் இறைவன் ஏன் அழைத்தான் உங்களை
ஆண்டுகள் பல சென்றும் ஆறவில்லை நினைவுகள்

**மீசாலை வடக்கு,
வேம்பிராய்,
கொடிகாமம்**

(CR/46628) J-1

**நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 01 . 05 . 1938

**மறைவு** 09 . 12 . 2025

### நடராசா புவனேஸ்வரி

நயினாதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 8ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட நடராசா புவனேஸ்வரி அவர்கள் கடந்த (09.12.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - ஆசைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவகுமாரன் மற்றும் மதிவதனா (ஆசிரியர் - யா/ந/ஸ்ரீ/க/க/ம/வி), நிரஞ்சனா (கனடா), சிவரஞ்சனா (கனடா), நந்தனா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஸ்ரீதயாளன் மற்றும் தயாகரன் (கனடா), காலஞ்சென்ற இரத்தினராஜ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌசல்யா - ரமேஷ், கௌதமி, கௌசிகன், கௌசிகா ஆகியோரின் பேர்த்தியும், கிருத்வியின் பூட்டியும், முத்துலிங்கம், ஈஸ்வரி, சிவகாமசுந்தரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான தங்கமுத்து , அம்பலவாணர், கந்தப்பு, முத்தையா, சௌந்தரம், செல்லம்மா ஆகியோின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஸ்ரீ. மதிவதனா (மகள்) - 070 318 2747
ம.தயாகரன் (மருமகன் - கனடா) - 416 4735 759
த.நிரஞ்சனா (மகள் - கனடா) - 647 624 5638

**தகவல்:
குடும்பத்தினர்**

(CS/60160) J-1

## பெண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கி வருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் தேவை. உணவு தங்குமிட வசதி இலவசம். தகுந்த சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். ஆண் முதியவர்கள் முதியோர் இல்லத்தில் இணைந்துக் கொள்ளப்படுவார்கள்.

நிர்வாகி
077 810 6857, 0759742495, 021 226 5551
www.valvaieldershome.com

(CS/60162) J-1

கொழும்பில் உள்ள அலுவலகம் ஒன்றிற்கு ஆண் உதவியாளர்கள் தேவை. தங்குமிடம் வழங்கப்படும் சம்பளம் 50,000/-

072 840 9065

## கண்ணீர் அஞ்சலி



### வல்லிபுரம் பரமநாதன்

மலர்வு 28.08.1951

உதிர்வு 12.12.2025

எமது கழக அங்கத்தவர்களான
திரு. P. பாஸ்கர், திரு.P. பிரபாகர்
ஆகியோரின் அன்புத் தந்தையின்
பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல மாத்தனை முருகப்
பெருமானை வேண்டுகின்றோம்.

**வளர்மதி முன்னேற்றக் கழகம்
வளர்மதி நிறைவாழ்வகம்
சம்பியன் லேன்,
கொக்குவில் .**

(CS/60163) J-1

## JOB VACANCY
## Administrative Assistant (Female)

**About Us:**
The Velummayilum Foundation is a charitable organization dedicated to impro ving education, health, and livelihood in the Vadamarachchi area.

**Position Overview:**
We are seeking a dedicated and detail-oriented Administration Assistant to join our team. This role involves supporting daily administrative tasks, managing communications, and ensuring smooth office operations.

**Key Responsibilities:**
Handle correspondence, both written and verbal
Assist in organizing regular classes, meetings and appointments
Maintain records and prepare reports
Support the team with administrative duties as needed

**Qualifications:**
Previous experience in an administrative role is preferred
GCE O-Level or A-Level qualifications, or a relevant degree
Proficiency in English, Sinhala, and Tamil (reading, writing, and reporting)
Strong organizational and communication skills

**Preferred :** Point Pedro, within a 10 km radius
**Age limit** : 25yrs – 40yrs

**What We Offer:**
A collaborative and supportive work environment
Opportunities for professional growth and development
Competitive salary and benefits

**How to Apply:**
Interested candidates are invited to submit their resume and a cover letter to info@velummayilumfoundation.org, or handover Velummayilum Foundation, Odakkarai Lane, Point Pedro. On or before 17th December 2025.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்தில் ஒதுங்கிய மணல் சட்டவிரோதமாகக் கொள்ளை!



## தடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்து

**கிளிநொச்சி,டிசெ.14**
**அண்மையில் ஏற்பட்ட இயற்கைப் பேரிடரால் வீதிகளிலும், வாய்க்கால்களிலும் ஒதுங்கிய மணல், சட்டவிரோதமாகக் கொள்ளையிடப்பட்டுவருகின்றது இதனை உடனடியாகத் தடுக்கவேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆகியோர் பணிப்புரை விடுத்துள்ளனர்.**

கிளிநொச்சிப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் நேரில் சென்று கிளிநொச்சி பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரைச் சந்தித்து இந்தப் பணிப்புரையை அவர்கள் விடுத்தனர்.

இரணைமடுக்குளம் வான் பாய்ந்ததைத் தொடர்ந்து, திருவையாறு, வட்டக்கச்சி, கண்டாவளை ஆகிய பிரதேசங்களில் வீதிகளிலும், வாய்க்கால்களிலும் பெருமளவில் மணல் குவிந்துள்ளது.

மக்கள் துயரத்தில் இருக்கும் இந்த வேளையில், சட்டவிரோதமாக டிப்பர்களில்வரும் கும்பல்கள், மணலை அள்ளிச் செல்வதாகப் பொதுமக்களிடமிருந்து அடுக்கடுக்கான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இயற்கைப் பேரிடரைப் பயன்படுத்தி, இடம்பெறும் சட்டவிரோதச் செயலை ஒருபோதும் அனுமதிக்கமுடியாது. சட்டவிரோத மணல் கடத்தலை உடனடியாகத் தடுத்துநிறுத்த அந்தப் பகுதிகளில் பொலிஸ் ரோந்து மற்றும் பாதுகாப்பை அதிகரிக்கவேண்டும். தேவைப்படும் பட்சத்தில், நிலைமையைக் கட்டுப்படுத்த விசேட அதிரடிப்படையினரின் உதவியையும் பெற்றுக்கொள்ளமுடியும் என்று அமைச்சரும், ஆளுநரும் சுட்டிக்காட்டினர். குவிந்துள்ள மணலை உள்ளூராட்சிசபைகளின் ஊடாக, சட்ட ரீதியாக அகற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்றும் ஆளுநர் சுட்டிக்காட்டினார். (க-113)

## மழை அங்கிகள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.14
அண்மையில் இடம்பெற்ற அனர்த்த நேரத்தின்போது 3 நாள்கள் தொடர்ச்சியாகப் பணியாற்றிய சாவகச்சேரி நகராட்சிமன்றத்தின் ஊழியர்களின் சேவைகளைப் பாராட்டி மழை அங்கிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. உபதவிசாளர் ஞா.கிஷோரின் ஒழுங்குபடுத்தலில் பிரான்ஸில் வசிக்கும் சுரேஷ் ஆனந்தின் நிதிப்பங்களிப்பில் 25 மழை அங்கிகள் வழங்கப்பட்டன. (ச-41-27)

## முல்லைக் கிராமங்களுக்கு உலருணவுகள் கையளிப்பு!

முல்லைத்தீவு , டிசெ.14
வடக்கு - கிழக்கினைத் தளமாகக்கொண்டு செயற்படும் சமுதாய முன்னேற்றக்கழகத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களுக்கு உலருணவுப்பொதிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சந்திரன் தலைமையில் முல்லைத்தீவு செல்வபுரம் கிராமம், கேப்பாப்பிலவு, பிலக்குடியிருப்பு ஆகிய கிராமங்களிலுள்ள மக்களுக்கே இந்த உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ச-41-19)





## கனடாவின் ஒத்துழைப்புடன் யாழ்.மாநகரில் கழிவகற்றல்

யாழ்ப்பாணம்,டிசெ.14
கனடாவின் றொரண்டோ நகரத்துடன் இணைந்து யாழ்.மாநகரசபையின் கழிவு முகாமைத்துவம் மற்றும் பொதுப் பாதுகாப்புத் திட்டங்கள் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடப் பிரதிநிதிகள் யோசனையொன்றை முன்வைத்துள்ளனர். இதுதொடர்பான விசேட கலந்துரையாடல் யாழ்.மாநகர சபா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது இந்தத்திட்டம் தொடர்பில் மாநகர உறுப்பினர்களுக்கு முழுமையாகத் தெளிவுபடுத்தப்பட்டது. இதற்கான சபை அங்கீகாரம் விரைந்து பெற்றுக்கொடுக்கப்படும் சந்தர்ப்பத்தில், மாநகரத்தின் அடிப்படைத் தேவைகளில் இருந்து திட்டங்களை விரைவாக ஆரம்பிக்கமுடியும் என்று மருத்துவபீடப்பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதுதொடர்பில் மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று முதல்வர் பதிலளித்தார். கலந்துரையாடலில் யாழ். மாநகர உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவபீட துறைசார் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ.16
சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் ஆசிரியரும், சைவப் புலவருமான இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு 'மகாபாரதம்' எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினார். (ச-41-66)





## தொழில் முயற்சியாளர் பயிற்சிநெறி ஆரம்பம்

பளை, டிசெ.14
பச்சிலைப்பள்ளிப் பிரதேச சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான ஐந்து நாள் பயிற்சிநெறி பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தின் 2025ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியொதுக்கீட்டுத் திட்டத்தின் ஊடாக தேசிய அருங்கலைகள் பேரவையின் ஒருங்கிணைப்புடன் இந்தப் பயிற்சிநெறி நடைபெறுகிறது. வளவாளராக திருமதி எஸ்.மலர்விழி கலந்துகொண்டு பயிற்சிகளை வழங்கிவருகிறார். (ச-41-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் அரசியல் தீர்வுக்கு அமெரிக்கா தலையிடவேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.14
காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கும் வரை வட-கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எட்டும்வரை அமெரிக்கா தமது ஈடுபாட்டைத் தொடரவேண்டும் என்று காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளின் சங்கத்தினர் தெரிவித் துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
சமீபத்தில் அமெரிக்காவின் விமானம் யாழ்ப்பா ணம் சர்வதேச விமானநிலையத்தில் தரையி றங்கியது. இது எங்கள் போராட்டத்துக்குப் புதிய நம்பிக்கையை அளிக்கிறது.

வவுனியாவில் மழையிலும் வெயிலிலும் காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளுக்காக 3218 நாள்களாகப் போராடிவருகிறோம்.

இறுதிக்கட்டப் போரின்போதும் மற்றும் அதன் பின்னரும் காணாமல் ஆக்கப்பட்ட ஆயிரக்க ணக்கானவர்களின் உண்மை நிலையைத் தேடி, பல ஆண்டுகளாகத் தமிழ்த் தாய்மார்கள் அடக்குமுறைக்கு மத்தியில் தொடர்ந்து போராடி வருகின்றனர். இலங்கை அரசு எங்களை மிரட் டினாலும், ஒடுக்கினாலும், அமெரிக்கா எமக்கு துணைநிற்கவேண்டும். அமெரிக்காவின் மனி தாபிமான நடவடிக்கை தமிழ்த்தாய்மார்களுக்கு ஒரு நெறிப்படுத்தும் வலிமையாக அமைந்துள் ளது. அமெரிக்கா தனது ஈடுபாட்டை மேலும் தொடரவேண்டும் - என்றனர். (ச-110)



# இடரால் பாதிக்கப்பட்டோருக்கு யாழ்.சிறைச்சாலையால் உதவி

யாழ்ப்பாணம் சிறைச்சாலை யால் அனர்த் தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்த உதவிப்பொதிகள் யாழ்ப்பாணம் மாவட் டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் ஒப்ப டைக்கப்பட்டது. சிறைச்சாலைக் கைதிகள் தங்களது ஒரு நேர உணவுக்கான பொருள்க ளையும், சிறைச்சாலை உத்தியோகத்தர்க ளின் நிதியில் இருந்து கொள்வனவு செய்யப் பட்ட பொருள்களையும் உள்ளடக்கி 180 பொதிகள் இவ்வாறு வழங்கப்பட்டன.

சிறைச்சாலை அத்தியட்சகர் சீ.இந்திரகுமார், பிரதான ஜெயிலர், ஏனைய ஜெயிலர்கள், புனர்வாழ்வு உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து இந்த உதவிகளைக் கையளித்த னர். (ச-27)

# சு.க.உபதலைவராக விஜேதாச ராஜபக்ச

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜேதாச ராஜ பக்ச, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவராக நியமிக்கப்படவுள்ளார்.

இந்த நியமனம் கட்சியின் அடுத்த செயற்கு முக் கூட்டத்தின்போது மேற்கொள்ளப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் விஜே தாச ராஜபக்ச தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்டத் தலைவராகவும் மஹரகம தொகுதி அமைப்பாளராகவும் சேவையாற்றிவருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது. (ச-இ)

# மரக்கறிகளின் விலை உச்சம்

யாழ்.,டிசெ.14
டித்வா புயலின் தாக்கம் மற்றும் மழையுடனான காலநிலை சீர டைந்துள்ளபோதும், மரக்கறிகளின் விலை குறைய வில்லை என்று நுகர்வோர் தெரிவித் துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட் டச் சந்தைகளில் மரக்கறிகளின் வருகை அதிகரித் துள்ள போதும், வியாபாரிகளால் இன்னும் விலை குறைக்கப்படவில்லை. கத்தரிக்காய்,பயிற் றங்காய்,பாவற்காய், பச்சைமிளகாய் உள்ளிட்டவற்றின் விலை கடந்த 3 வாரங்களுக்கு மேலாக ஒரே விலையிலேயே காணப்படுகின்றன என்றும் நுகர்வோர் கவலை வெளியிட் டுள்ளனர். (கு-17)

DEWMAS
5 YEARS ANNIVERSARY

JOB INTERVIEWS
▯ 4 / 12 / 2025 -31 / 12 /2025 வரை எமது நிறுவனத்தின் புதிய கிளையில் நடைபெறும்
▯ 95 , Palaly Road ,Jaffna
▯ ஆரியகுளம் சந்தியடி (High Teach Building 1st floor) ,
தில் தினமும் (ஞாயிறு தவிர) 2 இலிருந்து 4 நிறுவனங்கள் வரை பங்கு பெறும்
▯ 10இலிருந்து 30 JOB Seekers வரை பங்குபற்றுவார்கள்
▯ வேலை தேடுவோருக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்

JOB FAIR
▯ திகதி :- 19/12/2025 - 20/12/2025
▯ நேரம் :- 9.00 am - 5.00 pm
▯ இடம் :- கலாச்சார மண்டபம்(Cultural Hall) {Public Library க்கு அருகில் }
▯ வேலை தேடுவோருக்கு அனுமதிக் கட்டணம் இலவசம்
இதில் 40ற்கு மேற்பட்ட நிறுவனங்களும் 400 ற்கு மேற்பட்ட Job Seekers ம் கலந்து கொள்வார்கள்



MEGA OFFER
▯25% இலிருந்து 60% வரை நிறுவனங்களிற்கான எமது சேவை கட்டணங்களுக்கு 31.12.2025 வரை பிரம்மாண்ட கட்டண தள்ளுபடி வழங்கப்படும்

வேலைவாய்ப்பு-
▯ வேலைவாய்ப்புகளுக்கு
dewmasweb.com
▯ யாழில் வடக்கு , கிழக்கு , நாடு முழுவதுமான வேலைவாய்ப்புகளை dewmasweb.com ல் பார்வையிடலாம் மேலும் இதில் உள்ள Whatsapp Group , TIKTOK லிங்களில் இணைந்து உடனுக்குடன் தகவல்களை அறியவும்

வேலையாட்கள் தேவையா?
0741383368 , 0760984532
DEWMAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் கனமழை 735 குடும்பங்கள் பாதிப்பு!

**யாழ்ப்பாணம்,டிசெ.14**

**கடந்த சில தினங்களாக பெய்த கனமழை மற்றும் காற்று காரணமாக யாழ்ப்பாணத்தில் 735 குடும்பங்களைச் சேர்ந்த 2313பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத் துவப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.**

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் கடுமையான காற்றுக் காரணமாக ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 5பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

காரைநகர்ப் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் 472 குடும்பங்களைச் சேர்ந்த 1577பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் 2 குடும்பங்களைச் சேர்ந்த ஆறுபேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 105 குடும்பங்களைச் சேர்ந்த 304பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் நான்கு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

மருதங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் 137 குடும்பங்களைச் சேர்ந்த 357பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு வீடும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

சாவகச்சேரிப் பிரதேச செயலர் பிரிவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 4 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 16பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் சூறாவளியால் 5 குடும்பங்களைச் சேர்ந்த 11 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 5 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-27)

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 05 . 1965

மறைவு 08 . 12 . 2025



### ஞானம்பாள் கணேந்திரன்

யாழ். கொக்குவில் கிழக்கு நாமகள் ஒழுங்கையை பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன், Croydon ஐ வதிவிடமாகவும் கொண்ட ஞானம்பாள் கணேந்திரன் அவர்கள் கடந்த 08.12.2025 திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை சிரோன்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பரநிருபசிங்கம் - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகளும், கணேந்திரன் (Gana) அவர்களின் அன்பு மனைவியும், அபிஷேக், அகல்யா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஞானகணேசன் (நெட்டிலைப்பாய், கோண்டாவில்), ஞானபாஸ்கரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வசந்தினி (கோண்டாவில்), அஜந்தா (கனடா) ஆகியோரின் மைத்துனியும், ரஜீவன், ஷர்மி, அஸ்வின், ஷோபிதா, ஹம்ஷினி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2025) திங்கட்கிழமை லண்டனில் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
கணவன், சகோதரர்கள்.

## இலங்கைக்...

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களைக் கைது செய்யுமாறும், அத்துமீறல்களைத் தடுத்து நிறுத்துமாறும் வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் பெரும் போராட்டம் இடம்பெற்றது. இதைத் தொடர்ந்தே, இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீற வேண்டாம் என்று தமிழக மீனவர்களுக்கு மத்திய, மாநில அரசாங்கங்களால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன.

அந்த அறிவுறுத்தலில் உள்ளதாவது: 'டித்வா' புயல் காரணமாக இலங்கை மீனவர்கள் பெருமளவு வாழ்வாதார அழிவுகளை எதிர்கொண்டு துன்பத்திலும் துயரத்திலும் உள்ளனர். இவ்வாறான நிலையில் எமது மீனவர்கள் அத்து மீறி மீன்பிடிப்பது அவர்களை மேலும் துன்பத்தில் தள்ளுவதுடன் கொதிப்படையவும் செய்துள்ளது.

இதனால் இலங்கை மீனவர்கள், இந்திய மீனவர்களுக்கு எதிராகவும், இந்தியத் தூதரகத்துக்கு எதிராகவும் கடும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். எனவே இவ்வாறான நிலையில், தமிழக மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்தால் இலங்கைக் கடற்படை கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்குச் சாத்தியங்கள் உள்ளன - என்றுள்ளது. (அ-ம-100)


## University of Professional Studies R.A.De Mel Mawatha Colombo 03.

## Department of Law

**சட்டமாணி கற்கைகளுக்கான மாணவர் அனுமதி 2026/2027**

**Admission of Students for the Academic Year 2026/2027**

இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையினால் சட்டத்துறை சார்ந்த பின்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கற்கை நெறிகள்: (பிரிவு: 5)**

**Course 1: Diploma Courses**

**Course 2: Degree of Bachelor of Laws (LL.B)**

இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகத்தினால் Diploma in Law, LL.B. Programme கற்கைகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆறு மாத காலங்களினை கொண்டதாக **Course 1** கற்கை நெறியும் மூன்று வருட காலங்களினை கொண்டதாக (விசேடம் : 4 வருடங்கள்) **Course 2** கற்கை நெறியும் காணப்படுகின்றது.

**நன்மைகள்:**

* க.பொ.த (சா/த) பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள் கற்கைநெறியில் இணைந்து கொள்ள முடியும்.
* க.பொ.த (உ/த) பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள். உத்தியோகத்தர்கள் LL.B. கற்கைகளில் இணைந்து கொள்ள முடியும்.
* சட்டக் கல்லூரி பரீட்சைகள். சட்டக் கல்லூரியின் **Attorney-at-Law** பதிவு. கற்கைகளினை பூரணப்படுத்த முடியும். ஆங்கில மொழி ஊடாக கற்றல். பரீட்சைகள்.
* விரிவுரைகள் சட்டத்தரணிகளினால் நேரடி. **Zoom** ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ் மற்றும் ஆங்கில விரிவுரைகள்.
* இலகு தவணை கட்டண வசதி.
* பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரமுடையது.

**விண்ணப்பிக்கும் முறை:**

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை **Whats app**/மின்னஞ்சல் ஊடாக **27-12-2025** ற்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும். மேலதிக விபரங்களினை இணையத்தளம் ஊடாக பார்வையிடலாம்.

**மாதிரி விண்ணப்பப் படிவம்:**

**Department of Law**

**Admission of Students for the Academic Year 2026/2027**

1. Full Name :...........................................
2. Address :...........................................
3. Date of Birth :...........................................
4. NIC No. :...........................................
5. English Result (O/L) :...........................................
6. Educational Qualification: ...........................................
G.C.E (O/L) :...........................................
G.C.E (A/L) :...........................................
7. Professional Qualification: ...........................................
8. Mobile No. :...........................................
9. Occupation: ........................ Experience :........................
Date: ........................ Signature: ........................

**தெரிவு முறை:** நுழைவுப் பரீட்சை/நேர்முகப் பரீட்சை / பேரவையின் இறுதி முடிவு.

**மேலதிக விபரங்களிற்கு:**

உதவிப் பதிவாளர்
இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகம்.
கொழும்பு 03.

Whatsapp: 0741127636
Mobile: 0742349120/0775704893
e-mail: upsrecruitment25@gmail.com
Web: www.upscampus.lk

Colombo/Batticalo/Trinco/Kandy/Vavuniya/Jaffna/Killinochchi/Mullitivu/Mannar


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்துமீறிய...

புயலால் ஏற்பட்ட பேரழிவுகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல், ஜனாதிபதி அநுரவின் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது, இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றார். 'இராஜதந்திரத் தேவைகளுக்கு அப்பால் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்' என்றும் துரைராசா ரவிகரன் வலியுறுத்தினார். இதன்போது ஜனாதிபதி தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி என்பது பூகோள ரீதியான பிரச்சினை என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். எனினும், அதைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். உண்மையில் இந்தப் பிரச்சினை இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினை. எனினும், இந்தியப் படகுகள் எமது கடற்பரப்புக்குள் நுழைவதை நாம்தான் கட்டுப்படுத்த வேண்டும். இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் கடினமாக முயற்சித்து வருகின்றோம். எமது பாதுகாப்புத் தரப்பினர், குறிப்பாக கடற்படையினர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். எனினும் அத்துமீறல்கள் தொடர்கின்றன. இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தையும் நான் அறிவேன். எனவே இந்த விவகாரம் குறித்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ம-56)

## வடக்கில்...

தினம் செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை வடக்கு - கிழக்கில் மழைக்குச் சாத்தியம் உள்ளது இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறையின் தலைவர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் எதிர்வரும் 16ஆம் திகதி காற்றுச் சுழற்சியொன்று உருவாகும் வாய்ப்புள்ளது. இதனால், வடக்கு, கிழக்கு, மத்திய, சப்ரகமுவ, ஊவா, வடமத்திய மாகாணங்களில் கனமழை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் தொடர்ச்சியாக மழை கிடைத்து வருகின்றது. இதனால், சில இடங்களில் நிலச்சரிவுகளும் பதிவாகியுள்ளன. எதிர்வரும் நாள்களிலும் நிலச்சரிவைத் தூண்டும் கனமழை கிடைக்கும் என்பதனால் மக்கள் நிலச்சரிவு தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் நிலவுகின்ற குளிரான வளிமண்டல நிலைமை எதிர்வரும் 16ஆம் திகதி வரை தொடரும் - என்றுள்ளது. (அ-ம-66-26)

## யாழ். பல்கலைத்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களில் இருந்து மூன்று பேரை ஜனாதிபதிக்குப் பரிந்துரை செய்வதற்காக, பல்கலைக்கழகப் பேரவையின் விசேட கூட்டம் கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மதிப்பீட்டு நடவடிக்கைகள் நேர்மையான முறையில் நடைபெறவில்லை என்று குறிப்பிட்டே முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

துணைவேந்தர் நியமனத்துக்காக மூன்று பேரை முன்மொழிவதற்காக நடத்தப்பட்ட மதிப்பீட்டுக் கூட்டத்தில் பங்குபற்ற முடியாதபடி பேரவை உறுப்பினர் ஒருவர், இரண்டு உள்வாரி உறுப்பினர்களால் அச்சுறுத்தப்பட்டதன் மூலம் நேர்மையான தெரிவு இடம்பெறவில்லை என்று பேராசிரியர் ஒருவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

அதேநேரம், இந்த மதிப்பீட்டுச் செயன்முறையில் மதிப்பீடு செய்த குழுவின் விவரங்கள், விண்ணப்பதாரர்களின் தகுதி மற்றும் இதர விவரங்கள், மதிப்பீட்டு நடவடிக்கைகள் குறித்து, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவுக்கும் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்கள் உட்பட பல விவரங்களைக் கோரிப் பேராசிரியர் ஒருவர் உட்பட இரண்டு விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழகத் தகவல் அதிகாரியிடம் வழங்கப்பட்டுள்ளன.

துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின்னர், பேராசிரியர் ஒருவரை நேர்முகத் தேர்வுக்கு அழைக்கக் கூடாது என்று வேண்டுமென்றே குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்குடன் உள்வாரி உறுப்பினர் ஒருவர் நடந்து கொண்டார். எனினும், விண்ணப்பதாரிகள் அனைவரும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட வேண்டும் எனப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெளிவுபடுத்தியிருந்த நிலையில், அதே உள்வாரி உறுப்பினரும், இன்னுமொரு உள்வாரி உறுப்பினருடன் சேர்ந்து தனக்குக் கிடைக்கக் கூடிய புள்ளிகளைத் தடுக்கும் நோக்குடன் பீடாதிபதி ஒருவரை மதிப்பீட்டுக் கூட்டத்துக்கு வரமுடியாத அளவுக்கு அச்சுறுத்தியுள்ளனர் என்று பேராசிரியர் ஒருவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழவுக்கு அனுப்பியுள்ள மேன்முறையீட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இதேநேரம், உள்வாரிப் பேரவை உறுப்பினர் ஒருவர் தாமாகச் சுயவிருப்பின் அடிப்படையிலேயே மதிப்பீட்டுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று பலகலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ள போதிலும், பக்கச்சார்பற்ற முறையில் முறைப்பாடுகள் குறித்து சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-ம)

## நாடாளுமன்ற...

காலமாக தொடர் மருத்துவ சிகிச்சைக்கு உட்பட்டுவரும் சிவாஜிலிங்கம், அண்மையில் வல்வெட்டித்துறை நகரசபையின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில் நேற்று ஏற்பட்ட திடீர் உடல்நலக் குறைவு காரணமாக அவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவர் மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும், அவரது உடல்நிலை தொடர்பான மேலதிக தகவல்கள் விரைவில் வெளியிடப்படும் எனவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-ம-66-26)

## வாழவேமுடியாத...

தலைமையில் நேற்று விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போதே, டித்வா புயலால் ஏற்பட்ட இடரால் 70 குடும்பங்களின் வீடுகள் வாழமுடியாத நிலைக்குச் சென்றுள்ளன என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்தே, அந்த 70 குடும்பங்களுக்கும் புதிய காணிக்கு அல்லது வீடுகளை அமைப்பதற்கு தலா 50 இலட்சம் ரூபா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-56)

## நிவாரணப்...

பதி அநுர அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

டித்வா புயலால் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பில், ஜனாதிபதி அநுர தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை விரைவாக மீட்டெடுக்க அரசாங்கம் அனைத்து உதவிகளையும் வழங்கும். நிவாரணப் பணிகளில் எவ்விதத் தாமதமும் இருக்கக் கூடாது. மாவட்டச் செயலகத்துடன் அதிகாரிகள் இணைந்து செயற்பட வேண்டும். வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும். மாணவர்களின் கல்வியில் எந்தச் சிரமமும் ஏற்படக் கூடாது. அவர்களுக்கான உதவிகள் அனைத்தும் சீரான வகையில் முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார்.

அத்துடன், அனர்த்தத்தின் காரணமாக ஏற்பட்ட விவசாய மற்றும் கால்நடை இழப்பீடுகளை மதிப்பீடு செய்து அந்தக் கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

வடமாகாண ஆளுநர் என்.வேதநாயகன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், து.ரவிகரன், ப.சத்தியலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், ரிசாட் பதியுதீன், காதர் மஸ்தான், பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சுக்களின் செயலாளர்கள், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-ம-56)

## டிசெ.18ஆம்...

பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குரிய நிதியை பெறுவதற்கான குறை நிரப்பு பிரேரணையை நிறைவேற்றுவதற்கான தேவை உள்ளது. இதற்காகவே நாடாளுமன்றத்தின் விசேட அமர்வு எதிர்வரும் 18ஆம் திகதியன்று இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)


## மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 01 . 1940



மறைவு
12 . 12 . 2025

### திருமதி குலசேகரம் தங்கம்மா

பெரியநாவலடி கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குலசேகரம் தங்கம்மா அவர்கள் கடந்த 12.12.2025 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குலசேகரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை- சின்னாச்சி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சிவயோகம், சிவானந்தம், சரஸ்வதிப்பிள்ளை மற்றும் கமலாம்பிகை, சறோஜினி, தேவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சந்திரராணி, சந்திராதேவி, சந்திரகலா, மகேஸ்வரி, செல்வதேவி, கனகேஸ்வரன், கனகேஸ்வரி, சதீசா ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேந்திரன், சிவராசா, இராதாகிருஷ்ணன், ஜெகநாதன் (கொலண்ட்), ஜெகன், அருணா (கனடா), கேதீஸ்வரன் (U.K), பிரபாகரன் (கனடா) ஆகியோரின் மாமியும், கணபதிப்பிள்ளை மகேஸ்வரியின் மைத்துனியும், கோமதி, சுயமதி, குபேந்தினி, சுபத்திரா, நீருஜா, நிலானி, நிலோஜன், கிரிஷாந், நிறோஜன், லப்சன், வர்ணிகா, பருகனி, கர்நேயா, நர்கனி, வர்ணிதன், வர்ஷிகன், வர்கேஷ், வைஷ்ணவன், வைசிகன், வைசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பபிஷாந், மிதுஷன், தீபிகா, சபேந், லக்ஷாந், பிரஜீன், பூர்விகா, ஆருஷன், ஆருஷ்கா, அக்ஷயன், அக்ஷயா, அல்வின், அஸ்வின், தருன், லிலி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2025) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பெரிய நாவலடி,
கொடிகாமம்.

தகவல் : குடும்பத்தினர்.
தொ.இல.076 615 6608

(CS 30771) A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு கருவேலடி ஒழுங்கையில் 3 பரப்பு 8 குளி வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
ஆடியபாதம் வீதியிலிருந்து - 75m
கொக்குவில் சந்தியிலிருந்து - 300m

தொடர்புகளுக்கு:-
**077 923 9474**

(CS/60159) J-1

## ICT Classes

தரம் 6 - A/L வரை தனியாக/ குழுவாக கற்பிக்கப்படும்.
O/L மாணவர்களுக்கான மீட்டல் மற்றும் கடந்த கால வினாவிடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

R.Rajh (BIT) T.P - 077 501 0468

(CS/30776) J-1

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றுடன் தங்கி இருந்து வீட்டுவேலை செய்யக்கூடிய 30 வயதிற்குட்பட்டவர்கள் பணிப்பெண் தேவை.
1 லட்சத்திற்கு குறையாது சம்பளம் வழங்கப்படும், தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகளும் உண்டு.

தொடர்புகளுக்கு: **078 618 2706**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் வசாவிளானில் 16 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடிப் பாதையுடன்
- பலாலி வீதி 150m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 250m தூரம்
- செம்மண் காணி, நன்னீர் ஊற்று நிலம்.

குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி

தொடர்பு:- **074 029 2338**
**076 990 3039**

(CS 30775 B) A

## வீடு வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்மித்து அல்லது யாழ் கச்சேரியை அண்மித்து மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு:
**077 557 3326**

(CS/60167) J-1

## தேவை

BBQ சமையல் ஆள் தேவை
விடுதி முகாமையாளர் தேவை

தொடர்பு: **074 31 35 595**

(CS 30783) A

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவகிரி மெயின் றோட்டுடன் 38 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- சுன்னாக காபற் வீதி முகப்புடன்
- சுன்னாகம் புத்தூர் செல்லும் பிரதான காபற் வீதியில்
- செம்மண்தரை, நிலப்பரப்பு, குடியிருப்புக்கள் சூளவுள்ள பகுதி
- நிலாவரைக் கிணறு 300 மீற்றர்
- கடைகள் அமைப்பதற்கும், வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்
- இரண்டு பரப்பாகவும், ஒன்றரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- யாழ்ப்பாணம் பஸ் நிலையம் 10 km

தொடர்பு:- **076 860 2770 / 076 987 8617**

(CS 30775 A) A

## 2026 புதிய கல்வி ஆண்டு

தரம் 6 இரண்டாம் மொழி சிங்களம்
(புதிய பாடத்திட்டம்)
ஆரம்பம் : 22.12.2025
இடம்: 55/6, கல்லூரி வீதி, நீராவியடி யாழ்.
இலங்கை வேந்தன் திருமண மண்டபத்திற்கு அருகில்.
ஏனைய வகுப்புகளும் நடைபெறுகின்றன.

077 990 6867 / 077 21 40 220

(CS 30781) A

## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி பாடசாலையை அண்மித்த பகுதியில் கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வில் 2 பரப்புக் காணி மற்றும் கடையுடன் கூடிய அழகிய வீடு விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை

தொடர்பு:- **+1437 441 5699**
E-mail: saitheva09@gmail.com

(CS/60165) J-1

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் அச்சுவேலி 34 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்புகளாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடிப் பாதையுடன்
- அச்சுவேலி விமான நிலைய வீதி (மருதடி வீதி)
- அச்சுவேலியிலிருந்து தெல்லிப்பளை செல்லும் பிரதான வீதியில் 300m தூரம்.
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் முதல் 12 இலட்சம் வரை

அச்சுவேலி நகரம் 1km தூரம்.
செம்மண் காணி, நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.

தொடர்பு:- **077 2880 152, 076 7390 413**

(CS 30785 C) A

## தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், களஞ்சியக் காப்பாளர்கள் தேவை

எமது கட்டிட நிறுவனத்திற்கு குறைந்தது 02 வருட அனுபவம் உள்ள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள். களஞ்சியக் காப்பாளர்கள் தேவை.

தகைமைகள்
- NCT/ NDT (CIVIL)
- சாரதி அனுமதிப்பத்திரம் (Light vehicle)

சுயவிபரக்கோவையை Shiradiengineering@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 077 699 9021 எனும் Whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

(CS/60171) J-1

## வேலைவாய்ப்பு

சுன்னாகத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையத்திற்கு
(Computer Billing)
செய்யக்கூடியவர்கள் / பழக விரும்புபவர்கள் தேவை.
தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
ஆண்கள் மட்டும்.

தகைமைகள் :
அடிப்படை கணினி அறிவு அவசியம்.
வயதெல்லை : 20 - 30 வயதுவரை

தொடர்புகளுக்கு:-
**070 401 6775**

(CS/60156) J-1

## David Pieris Holdings (Private) Limited

### INVITATION FOR EXPRESSION OF INTEREST (EOI)

**யாழ்ப்பாணம் பிறவுன் வீதியில் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள பல்நோக்கு வர்த்தகக் கட்டடத்தின் கட்டுமானத்திற்கான ஆலோசனை சேவைகள்.**

01 பிராந்திய முகாமையாளர் – தொழில்நுட்பம், டேவிட் பீரிஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட், எண். 120, 120 A, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை, யாழ்ப்பாணம் பிறவுன் வீதியில் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள பல்நோக்கு வர்த்தகக் கட்ட கட்டுமானத்திற்கான ஆலோசனை சேவைகளுக்கான ஆர்வ வெளிப்பாட்டுக்கான அழைப்பை விடுத்துள்ளார்.

02 பலமாடிக் கட்டடத்திற்கான கட்டடக்கலை, கட்டமைப்பியல், இயந்திரவியல், மின்சாரவியல் மற்றும் குழாய் பொருத்துதல் மற்றும் கட்டுமான முகாமைத்துவம், மேற்பார்வை போன்றவற்றை உள்ளடக்கியதாக இப்பணி காணப்படும்.

03 ஆர்வ வெளிப்பாட்டுக்காக விண்ணப்பிப்பவர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களாக இருக்கக் கூடாது என்பதுடன், இலங்கையில் ஆலோசகர் சேவைக்காக செல்லுபடியான வணிகப் பதிவைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

04 இரண்டு முறையில் தெரிவு இடம்பெறும்

1. தகுதி, பணிதொடர்பான முன் அனுபவம், வருமானம் மற்றும் கொண்டிருக்கும் வளங்களின் அடிப்படையில் விண்ணப்பங்களுக்கு முதல்கட்டத் தெரிவு இடம்பெறும்.
2. தொழில்நுட்ப மற்றும் நிதி தொடர்பான முன்மொழிவுகளுக்கு அமைய இறுதித் தெரிவு இடம்பெறும்.

05 ஆர்வம் உள்ள விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கான ஆர்வ வெளிப்பாட்டு ஆவணங்களை, 2025 டிசம்பர் 15ஆம் திகதி முதல் 2025 டிசம்பர் 22ஆம் திகதி வரையான காலப்பகுதியில், பிராந்திய முகாமையாளர் - டேவிட் பீரிஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட், எண். 120, 120 A, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 5.00 மணி வரையான நேரத்தில் எழுத்துமூல கோரிக்கையை முன்வைப்பதன் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

அல்லது, இல 405, பிரவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் மேற்குறிப்பிட்ட நேரத்திற்குள் ஆர்வவெளிப்பாட்டுக்கான ஆவணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்திசெய்யப்பட்ட ஆர்வ வெளிப்பாட்டு ஆவணங்கள் கடித உறையின் மேல் இடது மூலையில்
**"யாழ்ப்பாணம் பிறவுன் வீதியில் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள பல்நோக்கு வர்த்தகக் கட்டடத்தின் கட்டுமானத்திற்கான ஆர்வ வெளிப்பாடு என்று குறிப்பிட்டு"**
பதிவுத் தபால் மூலம் பிராந்திய முகாமையாளர்-டேவிட் பீரிஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவேட்) லிமிடெட், எண். 120, 120 A, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் 2025 டிசம்பர் 12ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

பிராந்திய முகாமையாளர் - தொழில்நுட்பம்,
டேவிட் பீரிஸ் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிடட்,
இல 120, 120 A, பன்னிப்பிட்டிய வீதி,
பத்தரமுல்லை.

David Pieris
Group of Companies



## தாதியர் தேவை

யாழ், கொழும்பு, வவுனியாவில் இயங்கிவரும்
பல் வைத்திய நிலையத்துக்கு

- கல்வி :- GCE O/L முடித்தவர்களுக்கு தாதியர் பயிற்சி எடுத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
- வயது :- 18 - 22 வயதுக்கிடைப்பட்ட திருமணமாகாத பெண்கள்
- சம்பளம் :- Rs. 30000 - 45000 இற்கு இடையில் அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

குறிப்பு: ஆங்கிலம், சிங்களம் கதைத்தல் விசேட தகுதியாகும்.

தொடர்பு: இயக்குநர்
**077 758 8729**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

தண்ணீரில் கண்டமென்று சாத்திரியும் சொன்னதாலே
தண்ணீரில் போகாமல் வீடுவந்து – கண்டவுடன்
தண்ணிபோட்டு தூங்கியதும் சென்றுரே மேலுலகம்
தண்ணியினால் ஈரல் இழந்து.

பொன்.சுகந்தன்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2056 கார்த்திகை 28 ஞாயிற்றுக்கிழமை (14.12.2025) சிகரம் :169

# புயலுக்குப் பின்!

○ நிலாந்தன்



புயல் அநுர அரசாங்கத்தைப் பலப்படுத்தியிருக்கிறது. அனைத்துலக அளவிலும் உள்நாட்டிலும் அரசாங்கத்தைப் பலப்படுத்தத் தேவையான ஒரு மனிதாபிமானச் சூழல் உருவாகியிருக்கிறது. இந்த மனிதாபிமான அரசியல்சூழல் அல்லது நிவாரண அரசியல்சூழல் எனப்படுவது அதன் தர்க்கபூர்வ விளைவாக அரசாங்கத்தைப் பலப்படுத்தும். அனைத்துலக அளவில் பெரும்பாலான நாடுகள் வரிசைகட்டி நின்று உதவி செய்கின்றன. குறிப்பாக முதலில் உதவியதும் இந்தியா. அதிகம் உதவியதும் இந்தியாதான். அது தவிர வெளிநாட்டில் வாழும் இலங்கையர்களும் உதவுகிறார்கள். சில புலம் பெயர்ந்த தமிழர்களும் அரசாங்கத்துக்கு நிதி சேர்த்துக் கொடுக்கிறார்கள். அல்லது தாம் சேர்த்த நிதியை தாம் வாழும் நாட்டின் அரசாங்கத்தின் ஊடாகக் கொடுக்கிறார்கள்.

உள்நாட்டில் செழிப்பான ஒரு மனிதாபிமானச் சூழல் மேலெழுந்துள்ளது. தொண்டு நிறுவனங்கள், மத நிறுவனங்கள், சிறிய சமூக அமைப்புகள் என்று பல்வேறு வகைப்பட்ட அமைப்புகளும் தனிநபர்களும் தன்னார்வமாக முன்வந்து உதவிகளைச் சேகரித்து, தேவைப்படும் மக்களுக்குத் கொண்டு சென்று கொடுக்கிறார்கள். நிவாரணத்தைச் சேகரிக்கும்பொழுது உள்ளூர் வணிகர்களும் காசு உள்ளவர்களும் தங்களால் இயன்ற அளவுக்கு அள்ளிக் கொடுக்கிறார்கள். சிங்களப்பகுதி ஒன்றில் ஒரு முதிய பெண் தன்னுடைய பங்குக்கு தன்னிடம் இருந்த இரண்டு பனடோல் மாத்திரை அட்டைகளை அன்பளிப்பாகக் கொடுத்தது ஒரு நெகிழ்ச்சியான சம்பவமாக சமூக வலைத் தளங்களில் பகிரப்பட்டது.

அதேசமயம் தமிழ்ப் பகுதிகளில் தன்னார்வமாக இளையவர்களும் தொண்டு நிறுவனங்களும் நிவாரணங்களைச் சேகரித்துக் கொண்டு மலையகத்தை நோக்கிச் செல்கிறார்கள். புயல் ஓய்ந்த அடுத்தடுத்த நாட்களில் ஒரு பகுதியினர் தனித்துவிடப்பட்டிருக்கும் முல்லைத்தீவை நோக்கியும் வன்னியின் ஏனைய பகுதிகளை நோக்கியும் சென்றார்கள். அங்கே தங்களால் முடிந்த உதவிகளைச் செய்த பின் மலையகத்தை நோக்கித் திரும்பினார்கள். வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் மலையகத்தை நோக்கி உதவிகள் செல்கின்றன. புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழலானது தமிழ் சகோதரத்துவத்தை மேலும் பலப்படுத்தியிருக்கிறது.

முஸ்லிம்கள் தங்களுடைய மதக்கட்டமைப்புகளுக்கு ஊடாகவும் தொண்டு நிறுவனங்களுக்கு ஊடாகவும் பொருட்களைச் சேகரித்து பாதிக்கப்பட்ட மக்களை நோக்கிச் செல்கிறார்கள். உதாரணத்துக்கு, "கெலி ஓயா அபிவிருத்தி நிதியம்" என்ற அமைப்பு கண்டி மாவட்டத்தில், உடுநுவரப் பிரதேச செயலர் பிரிவில், பள்ளிவாசலை மையமாகக் கொண்டு இயங்குகிறது. டித்வா புயல் அழிவுகளின் பின் உருவாக்கப்பட்ட அமைப்பு இது.

தென்னிலங்கையில் பாதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளை நோக்கி தன்னார்வமாகத் திரண்டு செல்கிறார்கள். அரச கட்டமைப்புகள் உதவிக்கு வரும் அதே வேளை, மக்கள் தாங்களாக முன்வந்து தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகிறார்கள். வெள்ளம் கட்டுக்கடங்காது ஓடிய பகுதிகளில் வீதிகள், வீடுகள், பொது இடங்கள் போன்றவற்றில் சேறு , களி போல மூடிக்கிடக்கின்றது. சில இடங்களில் கால் புதையக் கூடிய அளவுக்கு சேறு. அதனை அரச உதவி வரும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல், அயலில் உள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தாங்களாக முன்வந்து அகற்றுகிறார்கள். தெருக்களிலும் வீடுகளிலும் பொது இடங்களிலும் உள்ள சேற்றைக் கழுவி அகற்றுகிறார்கள். முறிந்து விழுந்த மரங்களையும் குப்பைகளையும் சேகரித்து ஓரிடத்தில் குவிக்கிறார்கள்.

இந்தவிடயத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒரே சமயத்தில் அரச கட்டமைப்புகள், அரசுசாராக் கட்டமைப்புகள், தன்னார்வலர்கள், இவர்களோடு உதவிக்கு வந்த நாடுகளின் தொண்டர்கள், படையினர் மற்றும் வெளிநாட்டவர்கள் என்று எல்லாத் தரப்புகளும் இணைந்து அந்தப் பகுதியைத் துப்புரவாக்கும் காட்சி அற்புதமானது. சில இடங்களில் உல்லாசப் பயணிகளாக வந்த வெள்ளைக்காரர்களும் காணப்பட்டார்கள். பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களே மக்களுக்கு உதவும் தன்னார்வத் தொண்டுச் செயற்பாடுகளில் ஜே.வி.பி.யின் அடிமட்ட வலைப்பின்னல் பலமாகச் செயற்படுகின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அடித்தளமாக இருப்பது ஜே.வி.பி. அது அடிப்படையில் ஓர் இயக்கம். அடிமட்ட கிராமிய வலைப் பின்னலைக் கொண்ட ஓர் இயக்கம். எனவே அவர்களிடம் உள்ள அடிமட்ட வலையமைப்பு புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழலை அரசாங்கத்துக்குச் சாதகமாகக் கட்டமைத்து வருகிறது.

இவ்வாறாக டித்வா புயலுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழல் என்பது ஒரு விதத்தில் அநுரவுக்குச் சாதகமானதாகவே காணப்படுகிறது. ஒருபுறம் நாட்டை நோக்கி உதவிகள் குவிக்கின்றன. இன்னொருபுறம், ஒரு பேரிடருக்குப் பின்னரான மனிதாபிமானச்சூழல் அதிகம் நெகிழ்ச்சியானதாகவும் உணர்வுபூர்வமானதாகவும் காணப்படுகிறது. இது இயற்கைப் பேரிடர் ஒன்றுக்குப் பின்னரான மனிதாபிமானச் சூழல். ஆனால் இங்கு இயற்கை மட்டும் பேரிடரை ஏற்படுத்தவில்லை. மனிதத் தவறுகளும் இதற்குக் காரணம் என்று எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுகின்றன. ரணில் விக்கிரமசிங்க இந்த அரசாங்கம் பதவியேற்ற புதிதில் இது ஓர் 'எல் போர்ட்' அரசாங்கம் என்று நக்கலடித்திருந்தார். அனர்த்த காலமொன்றை முகாமை செய்ய இந்த அரசாங்கத்தால் முடியவில்லை என்று நிரூபிப்பதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன.

நுகேகொட பேரணிக்குப் பின் டித்வா புயலானது எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு அதிகரித்த வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்துள்ளது.

வழமைபோல எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை எதிர்ப்பதனை ஒரு மரபாகப் பேணுகின்றன என்று அரசுக்கு ஆதரவான அறிவு ஜீவிகள் நியாயம் கற்பிக்கின்றார்கள். ஆனால் அது உண்மை அல்ல. எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் சிலவற்றை ஆழமாகப் பரிசீலிக்கவேண்டும். ஏற்கனவே முன்னெச்சரிக்கைகள் கிடைத்த போதிலும் அரசாங்கம் வருமுன் காக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்ற குற்றச்சாட்டு உண்மையானதுபோல தெரிகிறது.

இந்திய வானிலை ஆய்வுமையம் புயல் தொடர்பாக நவம்பர் 13ஆம் திகதியே எச்சரித்திருந்தது. நவம்பர் 26வரை அனைத்துத் தகவல்களும் இலங்கையுடன் பரிமாறப்பட்டுள்ளன என்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இணையத்தளம் கூறுகிறது. அது போலவே தமிழக வானிலை முன்னறிவிப்பாளர்களில் ஒருவராகிய செல்வக்குமார், தன்னுடைய யூடியூப் தளத்தில் இதுதொடர்பாக இலங்கையை 24 ஆம் திகதி எச்சரித்திருந்தார். குறிப்பாக முன்னெப்பொழுதும் ஏற்பட்டிராத வெள்ளப்பெருக்கும் மண்சரிவும் ஏற்படும் என்றும் அவர் எச்சரித்திருந்தார். அதைவிடக் குறிப்பாக, இந்தப் பேரிடரின் காரணமாக இலங்கை அரசாங்கம் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்த வேண்டி வரலாம் என்றும் செல்வக்குமார் மிகத் துல்லியமாக எதிர்வு கூறியிருந்தார். அது மட்டுமல்ல தன்னுடைய முன்னெச்சரிக்கையை அரசாங்கத்திடம் கொண்டு சென்று சேர்ப்பிக்குமாறும் கேட்டிருந்தார். அவருடைய முன்னெச்சரிக்கை அடங்கிய காணொலி 24 ஆம் திகதி வெளியிடப்பட்டது. இலங்கை வானிலை என்ற தலைப்பில் அது வெளியிடப்பட்டது

அதேபோல, யாழ்ப்பாணத்தில் வசிக்கும், யாழ். பல்கலைக்கழக, புவியியல் துறையின் தலைவராகிய பேராசிரியர் பிரதீபராஜா ஒரு புயலைக் குறித்து ஏற்கனவே எச்சரித்திருந்தார். கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு முன்பு அதாவது செப்ரெம்பர் மாதத்தின் தொடக்கத்தில் அவர் அந்த எச்சரிக்கையை விட்டிருந்தார். அவர் வழமையாக தன்னுடைய முகநூல் தளத்தில் வானிலை அறிவிப்புகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறார்.


அவர் ஒரு புவியியல் துறை பேராசிரியர். இயற்கை அனர்த்தங்களைக் குறித்து எச்சரிப்பது அவருடைய உத்தியோகபூர்வ கடமை அல்ல. அதைச் செய்யவேண்டியது வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் போன்றனதான். ஆனால் பிரதீபராஜா அதைத் தன்னார்வமாகச் செய்கிறார். இம்முறை பருவ மழையை முன்னிட்டு அவர் முகநூலில் பதிந்த நீண்ட முன்னெச்சரிக்கைகள் அடங்கிய பதிவு ஒன்றில் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. அதன்பின் வடமாகாண ஆளுநர் வேதநாயகன் அவரைத் தன்னுடைய அலுவலகத்துக்கு அழைத்து துறைசார் திணைக்களங்களின் பொறுப்பாளர்களையும் அழைத்து ஒரு கலந்தாலோசனை செய்தார்.

எனவே ஒரு பேரிடரைக் குறித்து முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருக்கவில்லை என்று அரசாங்கம் கூறமுடியாது. இந்த முன்னெச்சரிக்கைகளை அரசாங்கம் உரிய பாரதூரத் தன்மையோடு உள்வாங்கியிருக்கவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது. மேலும் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் கூறியதுபோல திணைக்களங்களுக்கு இடையில் போதிய ஒருங்கிணைப்பு இருக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் அரசாங்கம் அனர்த்தமொன்றை வினைத்திறனுடன் முகாமை செய்யவில்லை என்று பொருள் கொள்ளத்தக்கது.

எதிர்க்கட்சிகள் இதுபோன்ற குற்றச்சாட்டுகளை தொடர்ச்சியாக முன்வைத்துவருகின்றன. எனினும், பேரிடருக்குப் பின்னரான மனிதாபிமான உதவிகளுக்கான சூழலானது, எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளை கூர்மையிழக்கச் செய்கின்றது. அதோடு அரசாங்கம் அறிவித்திருக்கும் இழப்பீட்டுத் தொகையும் மிகப்பெரியது. இதுவரையிலும் இருந்த அரசாங்கங்கள் இதுபோன்ற அனர்த்தங்களின் போது அறிவித்திராத பெரிய தொகை இழப்பீடு அது. இந்த இழப்பீட்டின்மூலம் அரசாங்கம் தன்னை ஏழைகளின் நண்பனாக மீண்டும் ஒரு தடவை நிரூபிக்க முயற்சிக்கின்றது. அரசாங்கம் அறிவித்திருக்கும் பெரிய அளவிலான இழப்பீட்டுத் தொகையானது மக்கள் அபிமானத்தை வென்றெடுப்பதற்கு உதவும். இதனாலும் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு எதிராக குற்றச்சாட்டுகளை அடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. எனவே புயலுக்குப் பின்னரான அரசியல் சூழலைத் தொகுத்துப் பார்க்கும்போது, அது மனிதாபிமானத் தேவைகளை முன்னிறுத்தும் சூழலாக மேலெழுகிறது. இதனால் அநுர அரசாங்கம் எதிர்க்கட்சிகள் எதிர்பார்த்ததைப்போல பலவீனம் அடையவில்லை, மாறாக பலமடைந்திருக்கிறது என்றுதான் தோன்றுகிறது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தந்தை செல்வாவின் மனதில் உயர்வான இடம்பெற்ற இராசு!

○ மட்டுநேசன்

தந்தை செல்வாவின் மனதில் உயரிய இடத்தினைப் பெற்றிருந்த `சொல்லின் செல்வர்` இராஜதுரை கடந்த 7ஆம் திகதி இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டார்.

காசி ஆனந்தன் சிறையிலிருந்த காலத்தில் அவரது பிறந்த நாளைக் கொண்டாட இளைஞர் அணியினர் ஏற்பாடு செய்திருந்தனர். இந் நிகழ்வு தொடர்பாக தந்தை செல்வாவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த அழைப்புக்கு மதிப்புக் கொடுக்கும் முகமாக அவர் புகையிரம் மூலம் மட்டக்களப்புக்குப் பயணமானார்.

அவரை புகையிரத நிலையத்திலிருந்து அழைத்து வர பாசி என்று அக்காலத்திலிருந்து பிரபலமாக அழைக்கப்படும் பாலிப்போடி சின்னத்துரையும், பின்னாளில் கழுகுப்படையை நிறுவிய ராஜ்மோகனும் சென்றிருந்தனர். புகையிரதத்திலிருந்து தந்தை இறங்கியதும் அவரை வரவேற்ற இவர்கள் இருவரும் விழா நிகழ்ச்சி நிரல் அடங்கிய பிரசுரத்தை அவரிடம் வழங்கினர். அதனை வாசித்த தந்தை செல்வா "இதில் இராஜதுரையின் பெயர் இல்லையே? ஏன் ?" என்று கேட்டார். அவர் ஏற்றுக்கொள்ளக்கூடிய பதில் இவர்கள் இருவரிடமும் இல்லாததால் மௌனமாக இருந்தனர். அவ்வளவுதான்! தனது ரங்குப்பெட்டியுடன் வாடி வீட்டை நோக்கிச் சென்றார் தந்தை. தொடர்ந்து எதையும் கேட்கவோ, இவர்களுடன் பயணிக்கவோ அவர் தயாராக இல்லை என்பதை இவர்கள் புரிந்து கொண்டனர். இராஜதுரையை மதிக்காத இடத்துக்குத் தான் செல்வதற்குத் தயாரில்லை என்பதே தந்தையின் செய்தி.

அன்று மாலை தபால் புகையிரதத்தில் அவர் கொழும்புக்குத் திரும்பிச் சென்றார் இந்தச் செய்தி கட்சி வட்டாரங்களில் மிகப் பிரபலமாகிற்று. தந்தை செல்வாவின் மனதில் இராஜதுரை எத்தகைய உயர்ந்த இடத்தை பிடித்திருந்தார் என்பதை விளங்கினாலும், விளங்காததுபோல அவரது மரணம் வரை நடித்தனர் கட்சியிலுள்ள சில பிரபலங்கள். வாகனங்களில் சிங்கள 'ஸ்ரீ' எழுத்தைப் பொறிக்கும்படி அரசு விடுத்த உத்தரவை எதிர்த்து தனது EN 8608 மோட்டார் வண்டியின் எழுத்துக்களை தமிழில் எழுதிக் காட்சிப்படுத்தியவர் இராஜதுரை. இவருக்குப் பின்னரே ஏனைய தமிழ் அரசியல் வாதிகள் இந்த நடைமுறையைப் பின்பற்றினர்.

கட்சியை பொறுத்தவரை வடகிழக்கு எங்கிலும் இராஜதுரையின் அழகு தமிழைக் கேட்க மக்கள் திரண்டனர். குறிப்பாக பல மைல் தூரம் நடந்து சென்று அதனை ரசித்து விட்டு திரும்பினர் அந்த நாள் இளவயதினர். கட்சியில் திறமையான பேச்சாளர்களை வரிசைப்படுத்தும்போது இரண்டாமிடம் .மூன்றாமிடம் யார் யாருக்கு? என்பதில் முரண்பாடு இருக்கலாம்; முதலிடம் இராஜதுரைக்கே இருந்தது தந்தை செல்வாவின் மரணம்வரை. சொல்லில் செல்வராக இருந்ததைப் போலவே செயலில் வல்லவராகவும் அவர் இருந்தார். இவர் விதைத்த தமிழ்த்தேசிய விதை கிழக்கு மாகாணத்தில் உயரிய அறுவடையைத் தந்தது. கடந்த பொதுத்தேர்தல் முடிவை முழு இலங்கை ரீதியாக நோக்கினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே அநுர அலை வீசவில்லை. வேட்பாளர்களை பெரும்பாலும் அங்குள்ள மக்கள் பொருட்படுத்துவதில்லை. என்ன இருந்தாலும் தாங்கள் தமிழரசுக் கட்சியினர் தானே என மூன்றாவது தலைமுறையும் சிந்திக்கின்றதென்றால் மூலவிதையின் வீரியமே அதற்குக் காரணம்.

தந்தைசெல்வாவின் இறுதி நிகழ்வின் போது பிரமாண்டமான மக்கள் கூட்டத்தில் இராஜதுரைக்கு உரையாற்ற மூன்று நிமிடம் வழங்கப்பட்டது. "தந்தை செல்வாவுடன் எனக்கு அறிமுகம் ஏற்பட்டு 30 வருட காலம் அவருடன் உறவாகப் பழகிவந்துள்ளேன். அவரைப் பற்றி மூன்று நிமிடங்களில் பேசி முடியுங்கள் என்று பணிக்கப்பட்டுள்ளேன். மூன்று நிமிடங்களில் என்னால் எத்தனைப் பேச முடியும் கண்ணீரைத் தவிர ... " என்று இவர் ஆற்றிய உரை அனைவரின் இதயத்தைத் தொட்டு கண்ணீரை வரவழைத்தது..

தந்தையின் மரணத்தின் பின் சூழ்ச்சி வலை பலமாகப் பின்னப்பட்டது. மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதி என்பது உருவாக்கப்பட்டதே. தமிழர். முஸ்லிம் எனத் தலா ஒருவர் தெரிவாக வேண்டும் என்பதற்காகத்தான். 1977 பொதுத்தேர்தல் தமிழீழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பு என அறிவிக்கப்பட்டதென்றால் அதில் கட்சி சார்பாக ஒரு முஸ்லிமையும் (தமிழரசுக் கட்சிச் சின்னத்தில்) போட்டியிட வைத்திருக்கலாமே? இன்று முஸ்லிம் மாவீரர்களை ஏற்க மாட்டோம் என கிளிநொச்சியில் சிலர் அடம்பிடிப்பதைப் போலவே அன்று அமிர்தலிங்கம் மட்டக்களப்பில் முஸ்லிம்களுக்குரிய உரிமையை ஏற்க மறுத்தார். தமிழர்களை முழுமையாக நம்ப முஸ்லிம் மக்கள் தயங்குவதற்கான விதையை அன்று மட்டக்களப்பு விடயத்தில் அமிர்தலிங்கம் விதைத்தார். இன ஐக்கியத்தை விட தொடர்ச்சியாக மட்டக்களப்பில் வெற்றி பெற்று வந்த இராஜதுரையை மண்கவ்வ வைப்பதே அவரது இலக்காக இருந்தது.

கட்சிக்குள் இளைஞர் மத்தியில் காசி ஆனந்தனுக்குச் செல்வாக்கு இருந்தது. இராஜதுரையைப் போலவே அவரும் வளர்ந்து வந்தார். எனவே, ஒரே கல்லில் இரு மாங்காய்களை அடிக்க முனைந்தார் அமிர். கொடுக்கும் குடைச்சலை மீறி இராஜதுரை வென்றால் காசி தோற்பார். அரசியலில் அவர் இனி தலையெடுக்க முடியாது. இராஜதுரை வென்றாலும் அதற்கு முன்னதாக கொடுக்கும் குடைச்சலில் கட்சியை விட்டு அவர் போகும் நிலையை உருவாக்க வேண்டும் என நினைத்தார்.

உண்மையில் காசி ஆனந்தனை நாடாளுமன்ற உறுப்பினராக்க வேண்டுமென அமிர்தலிங்கம் நினைத்திருந்தால் யாழ்ப்பாணத் தொகுதியில் அவரை போட்டியிட வைத்திருக்கலாம். வடக்கு - கிழக்கு இணைந்த தாயகம் என்ற தமிழீழக் கோரிக்கைக்கு அது வலுச் சேர்த்திருக்கும். காசி சிறையிலிருந்து விடுதலையானதும் மட்டக்களப்புக்குப் போகவில்லை. காலை யாழ்தேவி மூலமாக யாழ்ப்பாணத்துக்கே வந்தார். அவர் வந்த புகையிரதம் தமிழ் இளைஞர்களால் நிரம்பிவழியும் நிலையில் இருந்தது. 'எனது வெள்ளைச் சட்டை சிவப்பு நிறமாக மாறிவிட்டது'என்று காசி உணர்ச்சி தளும்பப் பேசினார். அந்தளவு தொகை தமிழ் இளைஞர்கள் அவருக்கு இரத்தத் திலகமிட்டனர். யாழில் போட்டியிட காசி தயங்கியிருந்தால் தமிழ் இளைஞர் பேரவையினர் மூலமாக குறைந்தது 25 ஆயிரம் யாழ்ப்பாணத் தொகுதி வாக்காளரிடம் கையொப்பம் வாங்கி அவருக்கு அனுப்பியிருக்கலாம்.

காசி ஆனந்தன் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்டிருந்தால் குமார் பொன்னம்பலம் எதிர்த்துப் போட்டியிட்டிருக்க மாட்டார். யாழ்ப்பாணத்தில் போட்டியிட்ட யோகேஸ்வரனும் மன்னாரில் போட்டியிட்ட கனகதாசனும் மக்களுக்கு பரிச்சயமில்லாதவர்கள். அப்படியிருந்தும் மக்களின் மனதில் பரிச்சயமான காசி ஆனந்தனை தவிர்த்து இராஜதுரையுடன் மோத வைத்து பலிக்கடா ஆக்கியது அமிரின் குள்ளத்தனமன்றி வேறேது?

இன்று கட்சித் தலைவர்தேர்தலிலும்,நாடாளுமன்றத் தேர்தலிலும் தோற்ற சுமந்திரன் ஏதேதோ காரணங்களைக் காட்டி வெற்றி பெற்ற சிறீதரனுக்குக் குடைச்சல் கொடுப்பது போலவே சொந்தத் தொகுதியான வட்டுக்கோட்டைத் தொகுதியில் தோற்ற அமிர்தலிங்கம் தொடர்ச்சியாக மட்டக்களப்பில் வென்று வந்த இராஜதுரையை வேட்பாளர் நேர்முகத் தேர்வுக்கு வரவேண்டும் என ஆணையிட்டார். உண்மையில் வேட்பாளர் நேர்முகத் தேர்வை நடத்தும் சகல தகுதியும் இராஜதுரைக்கு உண்டு என்பது கட்சியில் எவருக்கும் தெரியாததா என்ன? மட்டக்களப்பில் பதற்றமான சூழ்நிலை உருவானதால் இராஜதுரைக்கோ அல்லது காசியானந்தனுக்கோ சார்பாக வடக்கிலிருந்து எவரும் பரப்புரைக்குச் செல்லக்கூடாது என முடிவெடுக்கப்பட்டது. அதனையும் மீறி கோவை மகேசன், ஈழவேந்தன் போன்றோர் காசி ஆனந்தனுக்காகப் பரப்புரை செய்தனர். ஓட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்ற கதையாக அதுவும் காசி ஆனந்தனுக்குப் பாதகமாகவே முடிந்தது.

கட்சித் தலைமை,எதிர்க்கட்சித் தலைமை எதற்கும் இராஜதுரை தகுதியானவரல்லர் என 1970 தேர்தலில் படுதோல்வியடைந்ததால் தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கிய மு. சிவசிதம்பரமும் அமிர்தலிங்கமும் தீர்மானித்ததையும் 1977 தேர்தலில் கொடுத்த குடைச்சலும் தந்தை செல்வா இல்லாத கட்சியில் தன்னால் தொடர்ந்து நீடிக்கமுடியாது என்ற முடிவுக்கு இராஜதுரையைத் தள்ளின.

ஊடகவியலாளராக, எழுத்தாளராக நடிகராக ஏற்கனவே மின்னிய இராஜதுரை, வீரமாகாளி அம்மன் கோயிலில் இருந்த சங்கிலியனுடையது எனக் கருத்தப்பட்ட வாளை தலைக்கு மேலால் மூன்று தடவை சுற்றி "தமிழீழ இலட்சியத்தைக் கைவிட மாட்டேன்" என்று அமிர்தலிங்கம் சபதமெடுத்த நடிப்பைப் பார்த்ததும் தன்னால் இவ்வளவு தத்ரூபமாக நடிக்க முடியாதெனக் கருதி கட்சியிலிருந்து விலக முடிவெடுத்தார்.

அத்துடன் ஐந்தில் நான்கு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்த ஜே.ஆருடன் சேர்ந்து அரசியலைத் தொடர முடிவெடுத்தார். அந்தச் சமயம் கட்சியிலிருந்து தான் விலக வேண்டியமைக்கான காரணங்களை விளக்கி அன்று இராஜதுரையை ஆற்றிய உரை பரபரப்பாக எல்லா இடங்களிலும் ஒலித்தது. அவர் பக்கம் இருந்த நியாயம் ஏற்கக் கூடியதாக இருந்தாலும் அவர் கட்சியில் இல்லாமலிருப்பது பொதுவாக தமிழருக்கு கவலையாக இருந்தது. (அமிர்தலிங்கம் ,மங்கையக்கரசி ,சிவசிதம்பரம் போன்ற ஒரு சிலரைத் தவிர )

இந்து சமய விவகாரம் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சை ஜே.ஆர். இவருக்கு வழங்க முன்வந்தார். இவர் கட் சி மாறுவதற்கேற்ப வகையில் சட்டத்திருத்தத்தையும் மேற்கொண்டார். தனக்குக் கிடைத்த பதவியைக் கொண்டு முடிந்ததைத் சாதித்தார் இராஜதுரை. விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியின் உருவாக்கம் இவரது முயற்சியின் விளைவே. அது இன்று கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தினுள் இயங்குகின்றது. சத்துருக்கொண்டான் பகுதியில் உள்ள இவரது ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் பல குடும்பங்கள் குடியேறி வாழ்ந்து வருகிறார்கள். சொத்துகளை வகைதொகையின்றிக் குவித்துவரும், குறிப்பாக பொதுத் தேவைக்குக்கூட தமது உடைமையான நிலங்களை கொடுக்க மறுக்கும் அரசியல் வாதிகள் இவரிடமிருந்து கற்க வேண்டிய பாடங்கள் ஏராளம்.

சிங்களவர்களைப் பொறுத்தவரை ஜே .வி. பி என்ற ஒரேயொரு ஆயுத அமைப்பே வரலாற்றில் தோன்றியது. ஆனால் வடக்கு-கிழக்கில் உள்ள தமிழர்களோ மொத்தமாக 36 அமைப்புகளைத் தோற்றுவித்தனர் . இத்தனை அமைப்புக்கள் தோன்றியும் இவற்றில் எவையும் தாம் இயங்கிய காலத்தில் இராஜதுரை தவறானவர் என்றோ துரோகி என்றோ குறிப்பிடவில்லை என்பது முக்கியமான விடயம் இவற்றில் ஒன்றான தமிழீழ விடுதலைக் கழுகுகள் படையை நிறுவிய ராஜ்மோகன் 1977 தேர்தல் மேடைகளில் ராஜதுரைக்காக பரப்புரை செய்தவர். படையினரின் தேடுதல் நடவடிக்கையைத் தொடர்ந்து புளொட் டில் இணைந்து செயற்பட முன் வந்த ராஜ்மோகனை அந்த இயக்கமே கொன்று தொலைத்தது. இவ் விடயத்தை புளொட் முக்கியஸ்தர் தனது எழுத்துக்கள் மூலம் உறுதி செய்துள்ளார். இன்று புளொட்டும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சியாக கருதப்படுகிறது.

இராஜதுரை கிராமம் கிராமமாக தமிழ்த் தேசிய உணர்வை விதைத்ததன் விளைவாகவே ஆயிரக்கணக்கான போராளிகள் பின்னாளில் உருவாகினர். குறிப்பாக பாசி என்ற யோகன் பாதர், என்று அழைக்கப்படும் பாலிப்போடி சின்னத்துரையும்.பேரின்பமும் இறுதியுத்தம் வரை பயணித்தனர். ஆரம்பத்தில் தமிழ் மாணவர் பேரவை,இளைஞர் பேரவை மூலமாக பங்களிப்பை வெளிப்படுத்திய பரமதேவா ,பன்னீர் செல்வம் ,சட்டத்தரணி பொன். வேணுதாஸ் சிவஜெயம் முதலானோர் மாவீரர்கள் ஆகினர் . இதற்கெல்லாம் அன்று கிழக்கு மண்ணில் இராஜதுரை ஊட்டிய தமிழ் உணர்வுதான் காரணம் என்பதை மறுக்க முடியாது.

இந்திய மற்றும் இலங்கை இராணுவத்தின் துணைக்குழுக்களாக விளங்கியவர்களில் ஐந்து தரப்பினர் இன்று தமிழ்த் தேசியவாதிகளாக உலாவுகின்றனர் இந்த ஐந்து தரப்பினரும் பிரிவினைக்கெதிராகச் சத்தியப்பிரமாணம் எடுத்துவிட்டே எம் .பி. பதவியை ஏற்றனர் . இவர்களில் எவருக்கும் ராஜதுரையை விமர்சிக்கும் தகுதியில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பலாலிக்கு வந்த அமெரிக்க விமானமும் பின்னெழும் சில கேள்விகளும்!

குலசிங்கம் வசீகரன்


இலங்கையின் முதலாவது சர்வதேச பயணிகள் விமானப் பறப்பானது 1947ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆம் திகதி இடம்பெற்றிருந்தது. இரத்மலானை விமான நிலையத்திலிருந்து மெட்றாஸுக்கு (இன்றைய சென்னை) புறப்பட்ட குறித்த விமானம் பலாலியில் தரையிறங்கி மீளவும் மெட்ராஸுக்கு பயணப்பட்டிருந்தது. அதாவது இலங்கை சுதந்திரமடைய முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச விமான சேவை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பலாலி விமான நிலையத்தின் ஊடாகவே இடம்பெற்றிருந்தது. இந்த விமானம் 'சீதா தேவி' என்று பெயரிடப்பட்ட Douglas DC3 (Dakota) வகையினைச் சேர்ந்ததாகும். 21 இருக்கைகளைக் கொண்ட இந்த விமானத்தில் 16 பயணிகளும் 5 விமானப் பணியாளர்களும் பயணித்திருந்தனர். இதிலே மற்றுமொரு குறிப்பிடத்தக்க விடயம் குறித்த விமானத்தின் வானொலித் தொடர்பாடல் அதிகாரியாகப் பணியாற்றியவர் ஜோன் ராஜ்குமார் வேதவனம் என்னும் தமிழராவார். இவர் யாழ்ப்பாணம், நல்லூரில் பிறந்து, யாழ் .பரி யோவான் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைக் கற்று பின்னர், கண்டி டிரினிட்டி கல்லூரில் கற்றவர். பலாலி விமான நிலைய வரலாற்றுக்குள் இவையெல்லாம் அடக்கம்.

இன்று இலங்கைக்கு நிவாரணப்பொருள்களைக் கொண்டு வந்த அமெரிக்க விமானப்படை விமானம் பலாலி விமான நிலையத்தில் தரையிறங்கிய விடயம் பெரும் பேசுபொருளாகியிருக்கிறது. "பலாலி விமானநிலையத்தில் சிறிய விமானங்கள் மட்டுமே தரையிறங்க முடியும், அதனாலேயே சர்வதேச விமானங்கள், ஏன் ஸ்ரீலங்கன் விமானசேவை விமானங்கள் கூட தரையிறங்க அனுமதிகள் வழங்கப்படாமல் இருக்கிறது, இந்நிலையில் எவ்வாறு அமெரிக்க விமானப்படை விமானம் தரையிறங்கியது?" என்ற கேள்வி பரவலாக எழுப்பப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

ஒவ்வொரு வகை விமானங்களுக்கும் இடையில் தேவைப்படும் ஓடுபாதையின் நீளங்கள் வேறுபடும், அதுமட்டுமல்ல அவை தரையிறங்கவும் மேலெழவும் வேறுபட்ட அளவிலான ஓடுபாதைகள் தேவைப்படும்.

அதிலும் பயணிகள் சேவையில் ஈடுபடும் விமானங்களுக்கும் விமானப்படை விமானங்கிகளுக்குமிடையில் கூட அதிக வேறுபாடுகள் உள்ளன. இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் கூட பல தடவைகள் இவ்வாறான விமானப்படைகளைச் சேர்ந்த பெரிய விமானங்கள் பலாலியில் தரையிறங்கியுள்ளன. இலங்கை விமானப்படை பயன்படுத்தும் சரக்கு விமானமான C-13 கூட பெரியவகை விமானமே. இங்கு பெரிய வகை எனக் குறிப்பிடுவது குறித்த விமானங்கள் தரையிறங்கவும் மேலெழவும் தேவையான ஓடுபாதையின் நீளத்தை வைத்தே குறிப்பிடப்படுகிறது.

பலாலி விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்பட்டு கடந்த 2019ஆம் ஆண்டு சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்தப்பட்ட போது அதனது ஓடுபாதையின் நீளம் 1400 மீற்றர். அதனாலேயே குறித்த ஓடுபாதையைப் பயன்படுத்தக்கூடிய வகையிலான விமானங்கள் மட்டுமே இதுவரையில் பலாலி




விமானநிலையத்தின் ஊடாக பயணிகள் விமானசேவையில் ஈடுபட்டுவருகின்றன.

இவ்வாறான பயணிகளுக்குப் பாதுகாப்பான விமானப் பயண சேவைகள் வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் ஓடுபாதை நீளங்கள் மற்றும் பல விதிமுறைகளை வகுத்து அவற்றின் அடிப்படையில் பல்வேறு அனுமதிகளை ஒவ்வொரு நாடுகளிலும், சர்வதேச ரீதியாகவும் வழங்குவதற்கென அமைப்புகள் உள்ளன. அஅந்தவ் அமைப்புக்களின் அனுமதிகளைப் பெறுவதன் மூலமே பயணிகளுக்கான சேவைகளை விமானசேவை நிறுவனங்கள் வழங்கமுடியும்.


குறித்த பயணிகள் விமானசேவைகளுக்கான விதிமுறைகள் விமானப்படை விமானங்களுக்குப் பொருந்தாது. அதுமட்டுமல்லாமல் விமானப்படைகளின் தேவைகளுக்காகத் தயாரிக்கப்படும் விமானங்கள் பெரும்பாலும் குறுந்தூர ஓடுபாதையில் தரையிறங்கக் கூடிய வகையிலேயே தயாரிக்கப்படுகின்றன. மேற்கூறிய காரணங்களினாலேயே அமெரிக்க விமானப்படை யின் C-130 Hercules வகை விமானம் பலாலியில் தரையிறங்கக்கூடியதாக இருந்தது. மேற்கூறிய பொதுவான விடயங்களைத் தாண்டி பலாலி விமான நிலையம் ஏன் பல்வேறு தரப்பினரது கவனத்தையும் பெறுகிறது? இலங்கையின் கேந்திர முக்கியத்துவமும், இந்தியாவுக்கு அண்மையில் பலாலி விமானநிலையம் உள்ளமையுமே முக்கியமான காரணங்களாகும். இவ்வாறான ஒரு விமான நிலையத்தில் சாதாரணமாக அமெரிக்க விமானப்படை தரையிறங்கவேண்டும் என்றால் நிச்சயமாக தமது நாட்டின் பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து இந்தியா அதற்கு அனுமதி கொடுத்திருக்குமா என்பது கேள்விக்குறியே.

ஆனால் தற்போது இலங்கை அனர்த்தசூழலில் இருந்து மீள உதவிகளை எதிர்பார்த்திருக்கும் நிலையில் இந்தியாவும் இதனை ஒரு பெரிய விடயமாக எடுத்துக்கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. இவையெல்லாம் ஒருபுறம் இருக்க பலாலி விமான நிலையம் பிராந்திய சேவைகளையும் தாண்டி சர்வதேச விமானங்களையும் கையாளும் விமான நிலையமாக மாறும் வாய்ப்புள்ளதா ?.

2019ஆம் ஆண்டு பலாலி விமானநிலைய அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பமாகின. மறுசீரமைப்பு மற்றும் விரிவாக்கம் என்ற அடிப்படையில் முதற்கட்டமாக 2300 மீற்றர் ஓடுபாதையில் 1400 மீற்றர் ஓடுபாதை தரமுயர்த்தப்பட்டதுடன் பயணிகள் விமானசேவைக்கு தேவையான பிற அத்தியாவசிய தேவைகள் (Taxiways, Apron, Control tower and Terminal) உருவாக்கப்பட்டன. இந்த வேலைத்திட்டங்களுக்காக இந்தியா 300 மில்லியன் ரூபாவை மானியமாக வழங்கியிருந்தது. மறுசீரமைக்கப்பட்ட விமானநிலையம் 2019ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16 ஆம் திகதி 'யாழ்ப்பாண சர்வதேச விமானநிலை யம் (JIA)' எனப் பெயரிடப்பட்டு பிராந்திய சர்வதேச விமானப் போக்குவரத்துக்காக அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது. அபிவிருத்தி செய்யப்பட்ட ஓடுபாதையின் நீளத்துக்கு (1400 மீற்றர்) ஏற்றவகையில் 75 வரையிலான இருக்கைகளைக்கொண்ட விமானங்கள் (ATR 72/Q300) மட்டுமே பயன்படுத்த முடியும். அந்த வகையிலேயே இலங்கையை சேர்ந்த FitsAir, இந்தியாவைச் சேர்ந்த Alliance Air, Indigo Air ஆகிய நிறுவனங்கள் ATR72 வகை விமானங்களைப் பயன்படுத்தி சேவைகளை வழங்கியிருந்தன. தற்போது Indigo Air மட்டும் பலாலிக்கு தினசரி சென்னையிலிருந்தும், வாரத்தில் மூன்று தினங்கள் திருச்சியிலிருந்து சேவைகளை வழங்குகின்றது.

2019ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட மறுசீரமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டம், எஞ்சியுள்ள 900 மீற்றர் ஓடுபாதையினையும் தரமுயர்த்தி 2300 மீற்றர் ஓடுபாதையாக விரிவுபடுத்துதல் என்பதாகவே இருந்தது. இதன்மூலம் தென்னிந்தியாவுக்கு அப்பால் சர்வதேச ரீதியில் ஏர்பஸ் போன்ற விமானங்கள் தரையிறங்கும் வகையில் விரிவுபடுத்துவது எனத் திட்டமிடப்பட்டிருந்தது. மேலும் மூன்றாம் கட்டமாக 3500 மீற்றர் வரை ஓடுபாதையினை நீட்டிப்பது என்றும் திட்டங்கள் தீட்டப்பட்டிருந்தன. ஆனால் முதற் கட்டத்துடனேயே பலாலி ஓடுபாதை மறுசீரமைப்பு, மேம்படுத்தல் என்பன தடைப்பட்டுப்போயின.

கடந்த ஒருவருடத்துக்கு மேலாக மீளவும் பல தடவைகள் புதிய அரசாங்கத்தினால் பலாலி ஓடுபாதை விரிவாக்கம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் சாதகமான நகர்வுகள் எதுவும் இடம்பெறுவதாகத் தெரியவில்லை. தற்போதுள்ள நிலையில் பலாலியில் 150 பயணிகள் வரையில் பயணிக்க கூடிய ஏர்பஸ் வகை (A320) விமானங்கள் தரையிறங்க மேலதிகமாக உள்ள 900 மீற்றர் ஓடுபாதையை தரமுயர்த்துவதோடு, பயணிகளைக் கையாளும் இடங்களும் நிச்சயமாக விரிவுபடுத்தப்படவேண்டும். அதற்குத் தேவையான காணியை விமானப்படை மற்றும் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை (CAA ) என்பன ஏற்கனவே கையகப்படுத்தியுள்ளன. மேற்குறித்த அபிவிருத்தி / விரிவாக்கச் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தேவையான நிதியினை மானியமாகவோ அல்லது கடனாகவோ வழங்க நிச்சயம் இந்தியா முன்வரும். அல்லது அரசு - தனியார் கூட்டிணைவு மூலமாக முதலீடாக பெற்று அபிவிருத்திகளை முன்னெடுக்கலாம். இதே நிலைமையே காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியிலும் காணப்படுகிறது. ஆனால் இவைகள் சாதகமாகப் பரிசீலிக்கப்படுவதும், அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுவதும் இலங்கை அரசின் தீர்மானங்களிலேயே தங்கியுள்ளன. இந்த அரசும் இனமுரண்பாடுகளை முன்னிறுத்தி வடக்கின் அபிவிருத்தியைத் தடை செய்யுமா அல்லது வடக்கின் அபிவிருத்தியின் ஊடாக நாட்டின் அபிவிருத்தியைச் சிந்திக்குமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசாமிநக



○ பா.குமுதன்

சிட்டிசன் என்ற திரைப்படத்தில் 'அத்திப்பட்டி'என்ற ஊரையே சிலர் ஒருநாளில் இல்லாமல் செய்திருப்பார்கள். அதேபோன்று இலங்கையின் வடக்கிலுள்ள, வவுனியாவில் கந்தசாமி நகர் என்ற கிராமத்தை ஒருநாளிலேயே காவுகொண்டு, அதை இல்லாமலே ஆக்கிவிட்டது டித்வா புயல்.

" வாடிக்கையா வாறவெள்ளம் தானே மழைவிட்டா ஓடிடும் என்று சாதாரணமா நினைச்சிற்றம். அது எங்கட வாழ்க்கையையே புரட்டிப்போடும் எண்டு கனவிலயும் நினைக்கேல்லை. 20 வருசமா கஷ்டப்பட்டு உழைச்சதில உயிர் மட்டும் தான் மிச்சம். ஆடு போய் ,மாடு போய் மாத்திறத்துக்கு உடுப்புக்கூட இல்லாத அவலநிலை எங்கட மக்களுக்கு வந்திற்று. என்ன நடந்தாலும் அந்த ஊர்லபோய் வாழ்றதை மட்டும் கற்பனைசெய்தும் பார்க்கமுடியேல்ல.. சண்டையால இடம்பெயர்ந்து வந்தம். இனியாச்சும் நிம்மதியா இருக்கலாம் எண்டு கனவுகண்ட மக்களுக்கு மரத்தால விழுந்தவனை மாடேறிமிதிச்சது போல உந்த வெள்ளம் எல்லாத்தையும் அள்ளிக்கொண்டு போட்டுது"

- இப்படித்தான் அண்மையில் டித்வா வெள்ளப்பேரிடரால் பூச்சியமாகிப்போன வவுனியா கந்தசாமிநகர் மக்களின் துயரக்கதைகள் நீள்கின்றன.

## எங்கே இருக்கின்றது கந்தசாமிநகர்?

வவுனியாநகரிலிருந்து 20 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள சிறியகிராமம். 2005 ஆம் ஆண்டு போர் காரணமாக வவுனியாவுக்கு அடைக்கலம் தேடி அகதிகளாக வந்த மக்கள் பாவற்குளத்தின் உபரி நீர் வெளியேறும் கல்லாற்றுப்பகுதியை அண்டி பிரதேசத்தில் குடியமர்த்தப்பட்டனர். ஆரம்பத்தில் 35 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டநிலையில் பின்னர் உபகுடும்பங்களாக பெருகி 77 குடும்பங்கள்வரை தற்போது அங்கு வாழ்ந்துவந்தனர். தோட்டச்செய்கையும், கால்நடைவளர்ப்பும் தான் அவர்களின் பிரதான ஜீவனோபாயம்.

வவுனியாவில் பெரிய நீர்ப்பாசனக்குளமாக பாவற்குளம் உள்ளது. பருவப்பெயர்ச்சி காலங்களில் அதன் கொள்ளளவை எட்டியதும் வான்கதவுகள் திறக்கப்பட்டு மேலதிகநீர் வெளியேற்றப்படுவது வழமை. அந்த நீர் குளத்தின் கீழான பல கிராமங்களில் வெள்ளப்பெருக்கை ஏறப்படுத்துவது தொடர்கதையாகிப்போன ஒன்று. அந்த நீர் வெளியேறும் ஆற்றுப்பகுதியான கல்லாறு கந்தசாமி நகரூடாகச் சென்றே கடலை அடைகின்றது. குளத்தின் நான்கு வான் கதவுகளும் திறக்கும் போது அந்தக்கிராமத்தின் பல வீடுகளுக்குள் வெள்ளம் தேங்கிவிடும். அப்போதெல்லாம் அந்த மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டு, பாடசாலைகளில் தங்க வைக்கப்படுவர். இது கடந்த 20 வருடகாலமாக வாடிக்கையாக நடக்கும் நிகழ்வாகி விட்டது.

## எவரும் எதிர்பார்க்கவில்லை

இந்த வருடம் டிசெம்பர் 27ஆம் திகதி காலை முதல், டித்வா புயல்காரணமாக வவுனியாவின் அனைத்துபகுதிகளிலும் கடும்மழை பொழிந்தது. பாவற்குளத்தின் ஒரு வான் கதவு அன்றுகாலை 9 மணிக்குத் திறக்கப்பட்டிருந்தது. அதிகமழை மற்றும் பாவற்குளத்தின் நீர்வரத்துக் காரணமாக கல்லாற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. வழமையாக இவ்வாறுதான் நடப்பதால் கந்தசாமிநகர் மக்கள் அதனைப் பெரிதுபடுத்தவில்லை. மாலை 5 மணியை நெருங்கியபோது பலரது வீடுகளுக்குள் வெள்ளம் உட்புகத் தொடங்கியது. அதன் பின்னரே நிலைமையின் அதிதீவிரத்தை மக்கள் உணர்ந்துகொண்டனர். வீட்டுக்குள் சென்றவெள்ளம் 'கடகடவென 'உயரத்தொடங்கியது. இதனால் நிலைகுலைந்து போனமக்கள் செய்வதறியாது வீடுகளைவிட்டு வெளியேறி பொது இடங்களில் தஞ்சமடைந்தனர்.

## வெள்ளக்காடு

" அண்டைக்குப் பின்னேரம் 5மணி இருக்கும் . திடீரெண்டு வெள்ளம் வீட்டுக்க வந்திட்டுது. அது வீட்டை மேவிப் பாயும் எண்டு நாங்கள் எதிர்பார்க்கேலை. நானும் என்ர தம்பியின்ர குடும்பமும் வீட்டிலதான் இருந்தம். எனக்கு மூன்று பிள்ளைகள். வெள்ளம் வந்த உடன ரெண்டுபிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு பாதுகாப்பான ஒரு இடத்தில விடுகிறதுக்கு முடிவெடுத்தம். வெள்ளம் வேகமா ஓடினபடியால் எல்லாரையும் ஒரேநேரத்தில வெளிய கொண்டுபோறது கஷ்டம். அதால அப்படி ஒரு முடிவு எடுக்க வேண்டியதாயிற்று. என்ர சகோதரனும் அவன்ர பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு என்னோட வந்தான். மெல்ல மெல்லமா வெள்ளத்தைக்கடந்து பாதுகாப்பான இடத்தில கொண்டுபோய் பிள்ளையளை விட்டிற்றம். என்ர மனைவியும் கடைசிமகளும் வீட்டிலதான் இருந்தவை. வீட்டில இருந்த மிச்ச ஆக்களைக் கூட்டிக்கொண்டுவர, நானும் என்ர சகோதரனும் திரும்பவும் காட்டாற்று வெள்ளத்துக்கால வீட்டுப் பக்கமாப் போனம். மழை விட்டபாடில்லை. எங்க பாத்தாலும் வெள்ளக்காடாக இருந்தது.



## எப்பிடித் தப்பிறது?

வீட்டுக்குள்ள போட்டன். இனி மனிசியையும், பிள்ளையையும் கூட்டிக்கொண்டு வெளியில போகவேண்டியதுதான். அந்த நேரத்தில நிலமட்டத்தோட நிண்ட வெள்ளம் திடீரெண்டு 5அடி வரைக்கும் உயர்ந்து, வீட்டையே மூழ்கடிச்சிட்டுது. நாங்கள் நிலைகுலைஞ்சு போட்டம். என்ர சகோதரனும் அவற்ற வீட்டைப் பாக்கிறதுக்காக போயிருந்தவர். என்ர வீட்டுக்க இப்படி ஒருகாலமும் தண்ணி வந்ததில்லை. அப்பிடி எதும் முந்தி நடந்திருந்தாக்கூட நாங்களும் முன்னெச்சரிக்கையா இருந்திருப்பம். ஆனால் இப்பிடித் திடீர் எண்டு வெள்ளம் வந்தபடியால் எதுகும் செய்ய ஏலாமல் போட்டுது. அடுத்தது என்ன நடக்கப்போகுது எண்டு யோசிக்கவே நேரம்இல்ல. என்ர மகளுக்கு 3 வயதுதான். மனிசியையும் பிள்ளையையும் எப்பிடியாவது பாதுகாப்பா வெளியேற்றோணும் என்று மட்டும் தான் மனம் சிந்திச்சுக் கொண்டிருந்தது. இரவு10 மணியாப் போட்டுது. வீட்டில இருந்து வெளியால போறதுக்கான எல்லா பாதையளும் வெள்ளத்தில் மூழ்கிட்டுது. கொஞ்சம் கொஞ்சமா எங்கடவீட்டு நீர் மட்டமும் இன்னும் உயரத்தொடங்கிட்டுது. இனியும் வெள்ளம் உயர்ந்தால் எல்லாரும் மூழ்கவேண்டியதுதான். வேற என்ன வழி எண்டு யோசிச்சன். வீட்டில கிடந்த கட்டிலுக்கு மேல மேசையைத் தூக்கிவைச்சன், அதில மனுசியையும், பிள்ளையையும் ஏத்தி, அப்பிடியே குசினியில உயரமாக் கிடந்த பிளாற்றில இருத்தினன். இனிப் பிரச்சினை யில்லை எண்டு தான் நினைச்சம். ஆனால் வெள்ளம் எங்கட நினைப்பில மண்ணள்ளிப் போட்டபடி, பிளாற் மட்டத்துக்கும் வந்திட்டுது. பிறகு காஸ் சிலிண்டரை பிளாற்றில வைச்சு, சிலிண்டருக்கு மேல மனுசியையும் பிள்ளையையும் தூக்கி இருத்தினன்.

## வாழ்வா? சாவா?

சில மணித்தியாலங்கள் அதிலேயே நிண்டம். 'எப்பிடியும் தண்ண
மனசில ஒரு நம்பிக்கை. ஆனால் நேரஞ் செல்லச் செல்ல வீட்டி
யும் தாண்டி வெள்ளம் வந்திட்டுது. வேறவழியில்லாம கூரை ஓ
உடைச்சுக்கொண்டு வீட்டுக்கு மேல ஏறி இருந்தம். இன்னமும் ம
அடுத்தால் விடியப்பிறம் கரண்டும் கட்டாப் போட்டுது. என்ர சகோ
லதான் . அவரும் வீட்டுக்கு மேல ஏறிநிண்டார். எல்லா வீட்டுக்
டாதால் ஊர்ச்சனத்டாலையும் எங்களுக்கு உதவமுடியாமல் போ
போன் இருந்தபடியால் என்ர சொந்தக்காரர் , ப்ரெண்ட்ஸ் எல்
நிலைமை பற்றி தெரியப்படுத்திக்கொண்டிருந்தன் . அது தான் எங்
ஓட்டு வீடெண்டபடியால அந்த ஓடுகளும் மழைக்குநல்லா ஈரம
கொஞ்சம் தடுமாறினாலும் இடறி தண்ணிக்குள்ள விழுந்திருவே
டியும்12 அடிக்கு மேல தண்ணி ஏறியிருக்கும். வாழ்வா? சாவா

உயிரைக் கையில பிடிச்சபடிதான் வீ
தம்." வெள்ளத்தில் உயிரை உறைய
இன்னும் அச்சம் அகலாத குரலே
சாமி நகரைச் சேர்ந்த அந்தக் குடு
வெள்ளத்தில் சிக்குண்ட குடும்பத்தி
கள் மீட்கப் பட்டார்களா? இல்லைய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வெள்ளத்தால் மூடுண்ட துயர்க்கிராமம்

# ...ர்: வவுனியாவின் அத்திப்பட்டியா?

### தோற்றுப்போன முயற்சிகள்

வெள்ளத்தில் சிக்குண்ட இந்தக் குடும்பத்திடம் இயங்குநிலையில் கைபேசி இருந்தமையால், இந்த அபாயநிலைமை தொடர்பாக மாவட்ட நிர்வாகம் உட்பட பல்வேறு தரப்புகளுக்கும் 28 ஆம் திகதி காலையே தெரியப்படுத்தப்பட்டுவிட்டது. எனினும் சீரற்றகாலநிலை தொடர்ந்தவண்ணம் இருந்தமையால் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கையில் தாமதம் ஏற்பட்டது. உலங்கு வானூர்திமூலம் அவர்களை மீட்பதற்கான முயற்சிமேற்கொள்ளப்பட்டபோதும் காலநிலைக் குழப்பங்களால் அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

இதற்குள் கிராமத்து இளைஞர்கள் சிலர் மீன்பிடிவள்ளங்கள் மூலம் வெள்ளத்தினூடே சென்று அவர்களை மீட்க முடிவு செய்தனர். ஆனால் அந்தக் காட்டாற்று வெள்ளத்தின் முன்னால் இவர்களின் சிறு வள்ளங்கள் தாக்குப்பிடிக்கமுடியாமல் தடுமாறின. அதனால் அந்த முயற்சியும் பயனற்றுப்போனது. மாற்று முயற்சியாக அவர்களை மீட்பதற்கு கடற்படையினர் வரவழைக்கப்பட்டனர். விரைந்துசெயற்பட்ட கடற்படையின் பயிற்றப்பட்ட விசேட குழு ஒன்று மாலை 3 மணியளவில் இயந்திரப் படகுமூலம் கிராமத்தின் உட்பகுதிக்குச் சென்றது. அவர்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் கா.செல்வத்தம்பியும் சென்றிருந்தார். அங்கு ஆபத்தான வகையில் காணப்பட்ட வீட்டுக்கூரையில் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, 3 வயதுக்குழந்தையும், அயல் வீட்டில் இருந்தவரும் பத்திரமாக மீட்டுவரப்பட்டனர். 20 மணித்தியாலங்களுக்கும்மேலாக நீடித்த அவர்களின் உயிர்ப்போராட்டம் கடற்படையின் மீட்போடு முடிவுக்கு வந்தது.

### எல்லாத்தையும் கொண்டுபோன வெள்ளம்

வீடுகளின் முகட்டளவு உயரத்திற்கு வெள்ளம் உட்புகுந்தமையால் கந்தசாமிநகர் மக்களின் உடைமைகள் அனைத்தும் வெள்ளநீரால் அடித்துச்செல்லப்பட்டிருந்தன. அவர்களில் பலர் போட்டிருந்த உடுதுணிகளுடன் தான்,போட்டதுபோட்டபடி, உயிரை மட்டும் கையில் பிடித்துக்கொண்டு வெளியேறியிருந்தனர்.

"வெள்ளம் வடிஞ்சிட்டுது. மழைகுறைஞ்சிட்டுது, இனியாவது எங்கட வீடுகளைப் போய் பார்க்கலாம் எண்டு எங்கட சனங்கள் ஊருக்குள்ள போச்சுதுகள். ஆனால் அங்க எங்கட ஊரே சுடுகாடு மாதிரிக்கிடந்திது. எங்கட உடைமைகள் எல்லாம் வெள்ளத்தோட போட்டுது. முக்கியமான ஆவணங்களைக் கூட நாங்கள் பாதுகாக்க ஏலாமல் போட்டுது. எங்கட வாழ்வாதாரத்துக்கு பக்கபலமா இருந்த ஆடு ,மாடு ,கோழி எல்லாத்தையும் வெள்ளம் கொண்டுபோட்டுது. பெத்த பிள்ளையளை மாதிரி நாங்கள் வளர்த்த மாடுகள் வெள்ளதுக்க செத்துக் கிடந்துதுகள். 20 வருசமா கொஞ்சம்கொஞ்சமா சேர்த்து வைச்ச எல்லாத்தையும் உந்த வெள்ளம் ஒருநாளில அழிச்சுப்போட்டுது. திரும்பவும் பூச்சியத்திலஇருந்து எமது வாழ்க்கையை தொடங்கவேண்டிய நிலைவரும் எண்டு நாங்கள் எதிர்பார்க்கேலைஎன்று தன் கண்முன்னாலேயே வெள்ளத்தில் மூழ்கிப்போன வாழ்வைப் பற்றி விரக்திதோயச் சொல்கின்றார் கந்தசாமிநகர் இளைஞர் ஒருவர்.

வெள்ளப்பேரிடரினால் அந்தக் கிராமத்தில்மாத்திரம் 300ற்கும் மேற்பட்ட கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு உயிர்இழந்துள்ளன. காட்டாற்று வெள்ளத்தால் சிமெந்தினாலான மலசலகூடத்தின் மேற்கூரைத்தளம் கூட நீரால் அடித்துச்செல்லப்பட்டு தொலைவில் வீசப்பட்டுள்ளது.அந்தளவுக்கு வெள்ளம் உக்கிரமாகவே இங்கே பாய்ந்திருக்கிறது.

### அழிவுக்குக் காரணம் அதிகாரிகளா?

இப்படியொரு வெள்ள அனர்த்தம் கந்தசாமிநகர் மக்களுக்கு நேர்வதற்கு, அதிகாரிகளின் அசமந்தப்போக்கே காரணம் என பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.பாவற்குளத்தின் அத்தனை வான்கதவுகளும் இப்படி ஒரேயடியாகத் திறக்கின்றமை தொடர்பாக தமக்கு அறிவிக்கப்படவில்லை என அந்தமக்கள் தெரிவிக்கின்றனர்.

"வழமையாகத் திறக்கும்போது எங்களுக்கு அறிவித்தல் விடுக்கப்படும்.நாங்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிடுவோம். இம்முறை அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தால் எங்கள் உடைமைகளையாவது நாங்கள் பாதுகாத்திருப்போம் "என்று அந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாவற்குளத்தின் வான்கதவுகள் 27ஆம் திகதி காலை 9 மணிக்குத் திறக்கப்பட்டன.மழைவீழ்ச்சி அதிகமானமையால் மறுநாள் காலை 28 அதன் நான்கு கதவுகளும் 10 அடி உயரத்திற்கு திறந்துவிடப்பட்டன. இதுவும் கிராமத்தில் வெள்ளம் பெருக்கெடுக்க ஒரு காரணம் என்பதை மறுப்பதற்கில்லை. இருப்பினும் அந்த இருதினங்களும் வவுனியாவில் அதிகபட்சமாக 505 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தது. மாவட்டத்தின் பல பகுதிகள் நீரில் மூழ்கியிருந்தன. எனவே பாவற்குளத்திற்கான நீர் வரத்தும் திடீர் என்று அதிகரித்தபோது அதனைத் திறந்துவிடும் முடிவை அதிகாரிகள் எடுத்திருந்தனர். அது தவிர்க்கமுடியாத ஒரு தீர்மானமாகவே இருந்திருக்கும். மழைவீழ்ச்சியின் அதிகரிப்பே இந்த வெள்ள அனர்த்தத்துக்கு பிரதான காரணமாக அமைந்தது. இதே நிலை செட்டிகுளம் பிரதேசசெயலாளர் பிரிவின் 'பீடியாபாம்' கிராமத்தையும் வெள்ளம் கடுமையாகப் பாதித்துள்ளது. மல்வத்துஓயாவின் பெருக்கெடுப்பினால் அந்தக்கிராமத்துக்குள் புகுந்தவெள்ளநீர் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

...ா?

...தண்ணிகுறையும் ' எண்டு
... வீட்டின்ர ஒருபக்கமுகட்டை
...கூரை ஓடுகள் கொஞ்சத்தை
...மும் மழை விட்ட பாடில்லை.
... சகோதரன்ர வீடும் பக்கத்தி
...ட்டுக்கையும் வெள்ளமெண்
...ல் போட்டுது. என்ர கையில
...ஸ் எல்லாருக்கும் எங்கட
...ன் எங்கட கடைசி நம்பிக்கை.
...ா ஈரமாகி ஊறிப்போட்டுது.
...ிருவமோ எண்டு பயம். எப்பி
... சாவா? என்ற அச்சத்தோட
...தான் வீட்டுக்கூரையில இருந்
...உறையவைத்த கணங்களை
... குரலோடு விவரித்தார் கந்த
...க் குடும்பத்தலைவர். இப்படி
...ும்பத்தின் கதி என்ன? அவர்
...லையா?



### காட்டுக்குப் போனவர் எங்கே?

வெள்ளம் வருவதற்கு முன்னர் கிராமத்தில் இருந்து காட்டுப்பகுதிக்கு மாடுகளை மேய்க்க முதியவர் ஒருவர் சென்றிருந்தார். வெள்ளம் வந்த பின்னரும் அவர் காட்டிலிருந்து வெளியே வரவில்லை. இதனால் அவருக்கு என்னாயிற்று என்ற ஏக்கம் உறவினர்களிடம் எழுந்தது. வெள்ளம் சற்றுக் குறைந்ததும் அவரைத் தேடுவதற்காக அந்த ஊரைச் சேர்ந்த இளைஞர்கள் புறப்பட்டனர். ஆனால் காட்டிலும் கடும் வெள்ளம். அந்த வெள்ளத்தின் மத்தியிலும் தேடுதல் தொடர்ந்தது. ஆனால் அவரைக் காணோம். சரி, இனியும் தேடமுடியாது என்று அவர்கள் திரும்புகையில் எதேச்சையாக மேலே பார்த்தபோது, அந்த முதியவர் மரமொன்றில் குளிரில் நடுங்கியபடி இருந்ததை இளைஞர்கள் கண்டுவிட்டனர். உடனேயே அவரை மரத்திலிருந்து மீட்டெடுத்து, ஊருக்கு அழைத்துவந்தனர்.





### மாற்றுக்காணிநிலம் வேண்டும்!

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் பல குடும்பங்கள் இன்னும் இடைத்தங்கல் முகாம்களிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளன. சிலர் உறவினர் வீடுகளில் உள்ளனர். வெள்ளப்பாதிப்பு அவர்களின் வாழ்வைப் பூச்சியமாக்கியுள்ளது.குழந்தைகளின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளது.வாழ்வாதாரம் இழக்கப்பட்டுள்ளது. எனவே மீண்டும் அந்தக்கிராமத்தில் சென்று வசிப்பதை அவ்வூர் மக்களில் பெரும்பாலானோர் விரும்பவில்லை.இதே நிலைதான் மீளவும் ஏற்படும் என அவர்கள் கூறுகின்றனர்.வவுனியாவில் குடியிருப்பதற்கு ஏற்ற பாதுகாப்பான அரசகாணிகள் பல இடங்களில் இருக்கின்றன. எனவே அவற்றை அந்தமக்களுக்கு பிரித்துவழங்குவதற்கான விரைவான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும்.

அவர்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டமைப்பதற்கான வழிமுறைகள் உருவாக்கிக்கொடுக்கப்படவேண்டும். உயிர்வாழ்வதற்கான உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும். வாழ்தலுக்கான போராட்டத்தில் அனைத்தையும் இழந்துபோன அந்த மக்களின் கோரிக்கைகளை மனிதாபிமான அடிப்படையில் பரீசிலிக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கும் சமூகத்திற்கும் இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரி

## போரின் கவிதை

கர்ப்பப்பையின் கதகதப்பில்
தாயின் இதயத்துடிப்பை
மூன்று மாதக் குழந்தை
கேட்கத் தொடங்கிய பருவம்.
கருமுட்டை உயிர் பெற்றதை
உணர்ந்து கொண்டபோது
இதயம் வேகமாகத் துடிக்கிறது
ஆனந்தத்தில் மனம்
இருப்புக் கொள்ளவிலை
ஆனால் அது நிலைக்கவில்லை..

ஒரு மாலைப்பொழுது
இரவு பகலை முத்தமிடும் வேளை
ஆயுதங்கள் ஏந்திய மனிதர்கள்
அகப்பட்டவர்களைச் சுட்டுக்கொன்றனர்!
எங்கோ தொடங்கிய கட்டளை
வேகமாக நிறைவேற்றப்படுகிறது.

இளமைக்காலம் அத்தனை கொடியதாக
கொல்லப்படும் என்பது விதியா?
எழுதப்பட்டதா?
எடுத்துரைக்கப்பட்டதா?
ஆயுதம் தாங்கிய வேடர்கள்
வேகம்கொள்கிறார்கள்.
அவள் உயிரின் நிழற் பிரதியை
கண்முன்னே சுட்டுக்கொல்கிறார்கள்
காட்டில் வேட்டையாடுவதாக
கண்ணுக்கெட்டிய மனித உருவங்கள்
உயிர் விடுகின்றன..
எந்த விசாரணையுமில்லை
எந்தக் கேள்வியுமில்லை
கண்ணில்பட்ட ஆண்மகன்களின்
உயிர்கள் அர்த்தமற்றதாக
மிக விரைவாகப் போய் முடிந்தன.

அவள் கணவன்
மூச்சின் பாகம், கனவின் முழுமை
இராணுவத்தின் குண்டால்
பிரேதமாகச் சாய்ந்தது!
கண்முன்னே சரிந்த
கணவனைப் பார்த்து
ஏன் என்பதற்குள்
எல்லாம் முடிந்து விடுகிறது!
மகிழ்வைக் கைகளில் வைத்து
தட்டிவிட்டது போல
சில நொடிக்கான கனவு அழிந்தது.
அன்றைய அழுகைக்காக
கண்ணீர் போதவில்லை!
அணைத்த சுகம் ஆற முன்
அவனை இழந்து நின்றவள்
முகத்தில் கிடந்த முத்தங்களை
கழுவித்துடைக்க
மனமின்றித் தவித்தாள்.
இது என்ன விதி!
அடுத்த நொடியைச் சிந்திக்காத
காதல் வாழ்வில் விதியென்று
தனித்துச் செல்ல எப்படி முயலும்?
காதல் தந்த கருவின் துடிப்பு
தொடங்க முன்
அவன் துடிப்பு அடங்கிப்போனது.
அவன் இதயம் ஓய
கர்ப்பத்தில் கரு துடிக்கத்தொடங்கியது!
அவன் உயிரே வயிற்றில் விழுந்ததாக
அவள் நிலத்தில் விழுந்து
அழுது ஓய்ந்தாள்!
ஆறுதல் வார்த்தைகள் அங்கு
பெறுமதியற்றவையாகின.

கர்ப்பத்தின் கனத்திலும்
இரவுகளின் பயத்திலும்
அவளுடைய பல இரவுகள்
பகற் பொழுதுகளாக
ஓடிமுடிந்தன.
தொண்டைக்குள் நின்று
இதயம் அழுத்திக் கொண்டது
அவன் இறந்து போனதை
நம்ப நாட்கள் எடுத்தன.

அவள் அழவில்லை
அழ முடியவில்லை!
ஆங்காங்கே சிதறிய பொழுதுகளாக
பாதுகாப்பைத் தேடி
தனித் தாயாக
தாய்மையின் பொறுப்புக்காக

வயிற்றில் இருந்த கருவோடு
தன் நாட்டை விட்டு
புலம்பெயர்ந்து செல்கிறாள்!

அவள் கருவில் இருந்த
கரு வளர்ந்து மருத்துவராக
பெயர் சூடி நிற்கிறது!
ஒரு உயிரற்ற துப்பாக்கிக் குண்டு
அவள் உலகத்தை அழித்தது!
அவன் உறவின் அடையாளத்தை
காப்பாற்றிக்கொள்ள
ஓடி முடித்தாள் மிக வேகமாக.
அந்த உறவு உயிர்காக்கும்
உருவமாக மறுவடிவம் பெற்றது.

வயிற்றில் இருந்தபடியே
போரின் சத்தங்களை
குழந்தை கேட்டிருக்கிறது.
அம்மாவின் இரத்தத்தில்
அச்சத்தின் துடிப்பு ஓட,
அப்பாவின் குரலின்றி
தாயின் அழுகையும்
அதற்கான காரணமும்
அறிந்து அமைதியாக
தன்னை வளர்த்துக்கொண்டது.
எங்கோ விழும் குண்டுகளுக்கும்
மூச்சுவிடும் விமானங்களுக்கும்
சுவாசிக்கமுடியாத மண்குகைகளில்
தாய் இருந்த பொழுதுகளை
தாங்கமுடியாமல்
வயிற்றில் உதைத்து
தாயை உணர்வேற்றியிருக்கிறது!

தாய்க்காக தான் இருப்பதை
சொல்லிக்கொண்டு
தந்தையின் உணர்வுகளை
தாயின் கண்ணீர் மூலம்
உணர்ந்துகொண்டு
கர்ப்பப்பைக் காலங்களை
துயர்மிக்கதாக கடந்தது!

வாழ்வின் வலிகள்
கருவின் மூலம் கடத்தப்பட்டு
கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கும்
தாயின் குரலை காது கொடுத்துக்
கேட்டுக்கொண்டு வளர்ந்து நெளிந்தது!
நாடும் உறவும் வெறுத்து
தன் குழந்தையின் உயிருக்காக
புலம்பெயர்ந்து
இப்போது வேற்றுநாடே கதியானது.
அப்பாவைப்பற்றிக் கேட்டவனிடம்
வருவார் என்பதை மட்டும் சொல்லி
வாசிக்கமுடியாத வரலாற்றை
சொல்லிக்கொள்ளாமல்
மறைத்து மறைத்து அவனை
வளர்த்தாயிற்று.

எச்சம் அவளோடு வந்ததால்
அவள் வாழ்வில் பிடிப்பும்
மகிழ்வும் மீள எழுந்தது.
வண்ணமில்லா வானவில்போல
துக்கமும் மகிழ்வுமாக
வேறுபடுத்தமுடியாத பிரிவுகள்
வேதனையின் முடிவுகளாக
சேர்ந்துகிடந்தன.
பாதுகாப்பதற்கு யாருமில்லாமல்
தனித்துப்போன அவள் பாதை
மகனின் வருகையால்
மலர்வுபெற்றது.

அறிவுமிக்கவனான
ஆற்றல் படைத்த
தன்னார்வ விற்பன்னனாக
அவன் திகழ்ந்த போது
கணவன் மீண்டதாக உணர்வு
எழுந்தது!

வெள்ளை ஆடையுடன்
மருத்துவனாகிய மகிழ்வும்
கருவைக் காப்பாற்றிக் கொடுத்த
நிமிர்வும் இரவுகளின் கண்ணீரை
பெறுமதியாக்கின!

அவன் இல்லையென்று தாலி
கழற்றப்பட்டது
நெற்றிக் குங்குமம் அழிக்கப்பட்டது
நிறச்சேலைகளை பைத்தியம் போல
நெருப்பில் எறிந்தாள்.
அவன் இல்லா வாழ்வு
வாழ்வல்ல வெறும் சாபம் என்று
சபித்த வேளை தான்
கருவின் துடிப்பும்
அதன் உருவ

மனதை மாற்றியது.
அவள் அழுத போதெல்லாம்

கருவின் இதயம் வரை
சென்று வலித்திருக்கும்.
அவள் கத்திய போதெல்லாம்
அதன் கழுத்துவரை சென்று
நெரித்திருக்கும்.

அந்தக்கவலை அலையில்
தவழ்ந்து கண்ணீர் மூழ்கிய
தாயின் கருப்பையில் கிடந்து
அழுகையை தாலாட்டாக
கேட்டு வளர்ந்து பெரியவனானதும்
விழுந்த வானம் போர்வையாக
மாறியது!

அவள் அவனை இழந்தாலும்
காலம் அவன் உயிரை
மகனாகக் கொடுத்தது!
மகன் தோள்கள் தாயைத் தாங்கும்
தைரியம் பெற்றதால்
கனவுகள் நனவாகி
உருப்பெற்று எழுந்தது.
கொஞ்சம் வாழலாம் எனும்
நம்பிக்கை மெதுவாகப் பிறந்தது!

நொடிகள் வருடங்களாகி...
வாழ்க்கையின் வடுக்களை
தடவித் தடவி காயமாற்றி
மறதிகள் மரணங்களை
மறந்துவிடும் எனும்
ஆழ்ந்த நம்பிக்கையை யாரோ
பேசினார்கள்?
இதயத்தில் விழுந்து
மூளைவரை படர்ந்து
உயிர் வலி கொடுத்த
இறப்புகளை மறத்தல்
அத்தனை எளிதல்ல.
காதலின் தொடக்கம்
காமத்தின் மகிழ்வு
கூடலின் சுகங்கள்
அநுபவித்த உடனே
துணையின் உறவு
சூட்டுடன் இருக்கையில்
கட்டியணைத்த உயிர்,
காமம் தீர்த்த உயிர்
நொடிப் பொழுதில் இரத்த வெள்ளத்தில்
நீந்திக்கிடந்ததை எந்தப்பெண்ணும்
ஏற்றுக்கொள்வாளா?
அவளால் மட்டுமா?
எவளாலும் முடியாது.

காலம் நினைக்கலாம்
மறந்தாயிற்று முடிந்தாயிற்று
வாழ்ந்து போயாயிற்று என்று,
அதை எழுதியும் கொள்ளலாம்.
வலித்தவள் வாழ்ந்தாள் என்னும்
வரலாறு பேசலாம்....
அவள் மனதைக்கிழித்து
மூளையை உரித்து...
நெஞ்சத்தைப்பிழிந்து
ஒன்றாகச் சேர்த்து எழுதிப்பாருங்கள்..
கதைகளாக எழுதிய
குறிப்புப்பின்னல்கள்
கணவனுக்கெழுதிய
கதைகளும் கவிகளும்
தாமே தமக்கு இசையமைத்துப்பாடும்!
குருவிக்கூடுகளாக சேர்த்துக்கட்டிய
நினைவின் ஆலயம்
நெஞ்சுக்குள் இருந்து
நினைவுகொண்டு துடிக்கும்.
மரணிக்கும் போது மடிவேன் என்றும்
இரவில் வாழ்கிறேன் அவனுடன் என்றும்
வலிகள் கூடி வீங்கிய உறுப்புகளுமாக
அவர்களின் வாழ்வின் அனர்த்தம்
நாம் யாருமே
அடையாளப்படுத்த முடியாத ஆழம்.
தீர்க்கமுடியாத துன்பம்!
துப்பாக்கி ரவைகள் கொன்று
போன வாழ்வுகள் துயரம் மிகுந்த
இருள் படிந்த இரவுகள்!

போர் செய்யும் வீரர்களே!
பெண்களிடமிருந்து
நீர் பிரிந்த ஆண்கள் போனார் என்று
புரிந்து கொள்ளாதீர்கள்.
அவள் சுமக்கும் கருவும்

அவள் தாங்கும் நினைவும்
யாருக்கும் தெரியாது
எவருக்கும் புரியாது
அவளின் இரத்த வேகமும்
இதயத்துடிப்பின்
ஆழ்ந்த சத்தமும் அவனோடு
பேசும் அழுது அணைக்கும்.

சுட்டு முடித்த வேட்டைக்காரர்களே!
நீங்கள் கொன்று முடித்தவர்களை
பிரிய முடியாமல்
பைத்தியங்களாக வாழும்
'காயத்ரி'களை
நினைத்துப்பாருங்கள்!
அவர்களின் இறப்பின்போதுதான்
இவை மறந்துபோகும்.
நீங்கள் கொன்றுபோட்டது
உடல்களை மட்டுமே
ஆத்மாக்கள் இன்றும்
கைபிடித்து அணைத்து
இவர்களோடு உலாவுகின்றன
அவை உம் கண்களுக்குத் தெரியாது
அவற்றை உணர்ந்துகொள்ளவும்
இயலாது.


ஆனந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிக்கான கலங்கரைவிளக்கமும் ஒரு தீர்ப்பும்



வரலாற்றையே புரட்டிப்போடுமளவுக்கு நீதிமன்றத் தீர்ப்புகள் பலமிக்கவை. அதேபோன்று சில தீர்ப்பு களே வரலாறாகவும் மாறிவிடுவதுண்டு. இன்னும் சில தீர்ப்பு கள் வரலாற்றுத் திருப்பு முனைக்கான வழிகாட்டிகளாகவும் அமைகின்றன. தீர்ப்புகள் என்பவை தனியே அந்த வழக்கோடு முடிந்துவிடுவதில்லை. ஒரு வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு, பின்னர் 'முற்தீர்ப்பு' என்ற அடிப் படையில் சட்டமாகவும் கொள்ளப்படுகின்றது. எனவே ஏதோ ஒரு வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாகக்கொண்டு, அதேபோன்ற வேறொரு வழக்கில் நீதியைப் பெறமுடிகின்றது. இந்தவகையில் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஜே.பி.ஏ. ரஞ்சித்குமார், இந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி வழங்கிய தீர்ப்பு, மனிதப்புதைகுழிகள் அகழ்வு தொடர்பில் வரலாற் றுக் கட்டுடைப்பொன்றை நிகழ்த்தியிருக்கிறது. மனிதப்புதைகுழி களின் தேசமாக, தமிழர் தாயகம் மாறி நிற்கும் வேளையில், காணா மல் ஆக்கப்பட்டோரின் கதி தெரியாமல் அவர்களின் உறவுகள் கலங்கி நிற்கும் வேளையில், நீதிக்கான கலங்கரை விளக்கம் போல அமைந்த களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றம், 'குருக்கள்மடம்' மனிதப்புதைகுழி தொடர்பில் வழங்கியிருக்கும் அந்தத் தீர்ப்பை நீதிக் காகப் போராடும் இனமொன்று அறிந்து வைத்திருப்பது காலக்கட்டா யம். எனவே அந்த அவசியம் கருதி குறித்த தீர்ப்பின் முழுவடிவமும் இங்கு தொடராகப் பிரசுரமாகின்றது. (ஆ-ர்)



3

28. இவ்விரண்டு சட்டஏற்பாடுகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள மேலுள்ள சட்டப்பிரிவுகளையும், அச்சட்டங்களின் முன் னுரைகளையும் நன்கு ஒருங்கிணைத்து பார்க்கும் போது, காணாமல் ஆக்கப்பட்ட உறவினர் ஒருவருக்கு, காணாமல் ஆக்கப்பட்டவர் எத்தகைய சூழலில் காணா மல் ஆக்கப்பட்டார் என்பதை அறிந்துகொள்வதற்கும், அவருக்கு என்ன கதி நடந்தது என்பதையும் அறிந்து கொள்வதற்குமான உரிமை சர்வதேச சமவாயங்களில் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக்கொண்டதன்படி, இந்நாட் டின் சட்டத்திலும் அந்த உரிமை அங்கீகரிக்கப்பட்டுள் ளது. அந்த உரிமையைப் பாதுகாப்பதற்காகவே 'காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (OMP)' எனும் அரச நிறுவனமும் உருவாக்கப்பட்டுள்ளது.

29. காணாமற்போன உறவினருக்கு அங்கீகரிக்கப்பட் டுள்ள இந்தச் சட்டஉரிமையைப் பயனுள்ளதாக்கும் வகையிலேயே 2016ம் ஆண்டின் 14ஆம் இலக்கச் சட்டத்தில் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவல கத்திற்கென, பிரத்தியேகமான கடமைகளையும், விசா ரணைத் தத்துவங்களையும் அச்சட்டம் உருவாக்கிக் கொடுத்துள்ளது.

30. அவ்வாறு வழங்கப்பட்டுள்ள சட்டரீதியான தத்துவத்தின் அடிப்படையிலேயே, காணமாற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் காணாமற்போனோர் தொடர்பில் விசா ரனை செய்வதற்கு அவசியமான 'புலனாய்வுத் தத்து வத்தைக் (Powers of investigation)' கொண்டுள்ளது. குறிப்பாக, அச்சட்டத்தின் பிரிவு 12, காணாமல் ஆக்கப் பட்டோர் தொடர்பான விசாரணையை முன்கொண்டு செல்வதற்கான அனைத்து அவசியமான படிமுறைக ளையும் ஒன்றன்பின் ஒன்றாக எடுத்துக்கூறியுள்ளது. அந்த விசாரணையின் படிமுறையின் ஒருகட்டத்தி லேயே, பிரிவு 12(ஈ) இடம்பெற்றுள்ளது. அதன் பிரகாரம் 'சந்தேகிக்கப்பட்ட புதைகுழிகளின் அகழ்வை அத்துடன் அல்லது தோண்டியெடுத்தலை நிறைவேற்றுவதற்கு நீதிமன்றக் கட்டளையொன்றுக்காக ஆள்புலநியாயா திக்கங்கொண்டுள்ள தோதான நீதவான் நீதிமன்றத் துக்கு விண்ணப்பிக்கும்' அதிகாரத்தையும் அந்த அலு வலகத்திற்கு வழங்கியுள்ளது.

31. மேலும், அதே சட்டப்பிரிவில் விண்ணப்பம் செய்வதுடன் மாத்திரமின்றி, அகழ்வு நடவடிக்கையின்போது கண்கா ணிப்பாளராகச் செயற்படவும் OMP அலுவலகத்திற்கு அதிகாரம் வழங்கியிருக்கின்றது.

32. இவ்விடயங்களை நன்கு கவனமாகப் பரிசீலனை செய்யும்போது, சந்தேகத்திற்கிடமான புதைகுழிகளை (Suspected gravesite) அகழ்வதற்கு தோண்டியெடுத் தலுக்கு காணாமற்போனோர் அலுவலகம் விண்ணப் பம் செய்யும் தருணத்தில், அவ்வாறான சந்தேகத்திற்கி டமான புதைகுழிகளை அகழ்வதற்கு தோண்டியெடுத் தலுக்கு கட்டளை ஆக்கும் நியாயாதிக்கம் (order of court to carry out an excavation or exhumation of suspected gravesites) பிரிவு 12(ஈ)இன் பிரகாரம் நீத வான் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றது என நீதிமன்றம் கருதுகின்றது.

33. மேலும், மேற்சொன்ன பிரிவில் நீதவான் நீதிமன்றிடம் சட்டம் எதிர்பார்க்கும் நீதிமன்றக் கடமையை (Judicial duty) நன்கு பரிசீலனை செய்யும்போது, இத்தகைய விசாரணை வழக்குகளில் நீதவான் என்பவர் தனது கடமைகளை வெறுமனே சட்டரீதியாக ஒப்படைக்கப்பட்ட கடமைகளை மாத்திரம் நிறைவேற்றுகின்றவராக மாத் திரம் அல்லர், மாறாக காணாமல் ஆக்கப்பட்டவர் களுக்குத் தகுதியானதும் கிடைக்கவேண்டியதுமான உண்மையைக் கண்டறிதல் மற்றும் நீதி அவர்களுக்கு கிடைக்கப்பெறுகின்றது என்பதை உறுதிப்படுத்தவேண் டிய இலங்கை அரசின் கடப்பாட்டை உறுதிசெய்கின்ற நீதிசார் கடமையையும் சேர்த்தே நிறைவேற்றுகின்ற பொறுப்புடைய ஒருவராகக் கடமையாற்றவேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றார்.

34. இந்தச் சட்டஏற்பாடுகள், மற்றும் புரிதலில் இருந்தே, இப்போது இந்நீதிமன்றத்தின் முன்னாலுள்ள இக்கட்ட ளையில் விடையளிக்கப்பட வேண்டிள்ள அடிப்படை யான வினாவினை மன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கின்றது.

35. அரசியலமைப்பின் உறுப்புரை 4(இ)இன் பிரகாரம் நீதிசெலுத்தும் அதிகாரமானது நீதிமன்றங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயமாகும். நிலுவையிலுள்ள வழக்கு நடவடிக்கை ஒன்றை எவ்வாறு எடுத்துச்செல்ல வேண்டுமென்பது தொடர்பில் சட்டஏற்பாடுகளுக்க மைய சுயாதீனமாகவும், நீதியாகவும் முடிவெடுக்க நீதிமன்றம் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இந்த வழக்கில் கௌரவ சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் காரணமாக இந்தப் பணியை கடந்த ஆறு வருடங்க ளாக மேற்கொள்ளப்படாது கிடப்பில் இடவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

36. நீதவான் நீதிமன்றில் முன்னெடுக்கப்படும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைத் தாக்கல் செய்தல் தொடர் பில், அந்தந்த பொருத்தமான கட்டங்களில், ஆலோ சனை மற்றும் பணிப்புரை வழங்கும் அதிகாரம் கௌரவ சட்டமா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள போதி லும், காணாமற்போனோர் அலுவலகச் சட்டத்தின் பிரிவு 12(ஈ)க் கீழ் செய்யப்படும் விண்ணப்பம் தொடர்பான விசாரணையில் அதுதொடர்பில் கட்டளையாக்குவதில் தலையீடு செய்வதற்கோ, பணிப்புரை விடுப்பதற்கோ, நிறுத்திவைப்பதற்கோ அதிகாரம் அளிக்கப்பட்டவராகக் காணப்படுகின்றார் என இந்நீதிமன்றம் கருதவில்லை. அத்துடன் அவ்விதம் தலையீடு செய்வதானது நீதவான் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நீதி முறையான கட மைகளில் அத்துமீறுவதாகவே அமையும் எனவும் கருதுகின்றது.

37. காணாமற்போனோர் அலுவலகச் சட்டத்தின் பிரிவு 12(ஈ) ன் கீழ் நீதிமன்றம் மேற்கொள்ளும் கடமையானது, உண் மையைக் கண்டறியும் தன்னளவில் விசேடமான (sui generis) ஓர் விசாரணைக்கு அவசியமான கட்டளையே யாகும் என்பதுடன், இந்த விசாரணை மற்றும் கட்டளை வழங்குதல் எவரது தலையீடுமின்றி சுதந்திரமாக நடை பெறவேண்டியதொரு நடவடிக்கையுமாகும்.

38. சந்தேகத்திற்கிடமான மனிதப்புதைகுழி அகழ்வு நடவ டிக்கையானது, மனித உரிமைமீறல் இடம்பெற்று, மனிதாபிமானத்துக்குப் புறம்பாக இடம்பெற்ற வன் முறையான சூழ்நிலையொன்றினால் அல்லது அறியப் படாத சந்தேகமான காரணங்களினால் நடந்திருக்க லாம் என்று ஊகிக்கப்படும் பல எண்ணிக்கையான மனிதர்களின் மரணங்கள் நிகழ்ந்திருக் கக்கூடிய மனிதப்புதைகுழி தொடர்பான முறைப்பாட்டின்மீதான அகழ்வு நடவ டிக்கை என்று வரும்போது, இன்னும் முக் கிய அவதானத்தைப் பெறுகின்றது.

39. பாதிக்கப்பட்டவர், அவரின் உறவினர்கள் இத்தகைய விசாரணையை மேற்கொள்ளுமாறு நீத வான் நீதிமன்றிடம் கோரிக்கை முன்வைக்கும்போது நீதவானின் கடமை வெறுமனே நடவடிக்கைசார்ந்த கடமையாக மட்டுப்படுத்தபட்டதல்ல மாறாக உண்மை யைக் கண்டறிவதற்கான பரந்த சட்டக் கடப்பாட்டையும், அரசியலமைப்பு ரீதியான நீதியைப் பாதிக்கப்பட்டவர் களுக்குப் பெற்றுக்கொடுக்கும் கடமையை ஆற்றவும் நீதவான் ஒருவர் சட்டத்தினால் எதிர்பார்க்கப்படுகின்றார்.

40. இந்த வழக்கில் சந்தேகத்திற்கிடமான குருக்கள்மடம் மனிதப்புதைகுழியை அகழ்வாய்வு செய்து நீதிபெற்றுத் தருமாறும், எச்சங்களை உரிய சமயஅனுஷ்டானங்க ளுக்காக தம்மிடம் ஒப்படைக்குமாறும் பாதிக்கப்பட்டவர் சார்பிலும், அவர்கள் சார்பில் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் அகழ்வாய்வு செய்வதற்கும் விண் ணப்பம் செய்துள்ள நிலையிலேயே, கௌரவ சட்டமா அதிபர் 'விசாரணை நடவடிக்கைகள் இனிமேலும் அவ சியமில்லை' என இத்தால் அறிவுறுத்தல் வழங்கி யுள்ளார்.

41. முறைப்பாட்டாளரின் முறைப்பாடு தொடர்பான கோவை, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் செய்யப்பட்ட விண்ணப்பம் ஆகியன கௌரவ சட்டமா அதிபரின் கவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்த நிலையில், விசாரணை நடவடிக்கைகள் அவசியமில்லை' என அறிவுறுத்தி வழக்கை முடிவுறுத்தப் பணிக்கும் கௌரவ சட்டமா அதிபரின் இந்த முடிவானது எந்த அடிப்படை யில் எடுக்கப்பட்டது என்பதற்கான சட்ட, சூழ்நிலைக்கார ணங்கள் எதுவும் அக்கடிதத்தில் எடுத்தியம்பப்பட வில்லை.

42. பாதிக்கப்பட்டவர் தனது முறைப்பாடு தொடர்பில் நீதி யான முடிவை நீதிமன்றில் எதிர்பார்த்திருக்கும் சூழ் நிலையில், கௌரவ சட்டமா அதிபர் இவ்வாறானதொரு முடிவுக்கு வந்துள்ளமையை இந்நீதிமன்று ஏற்றுக் கொண்டு வழக்கை முடிவுறுத்தினால் பாதிக்கப்பட்டவர் இந்நீதிமன்றில் செய்துள்ள நீதிப்பரிகாரத்திற்கான விண்ணப்பம் நீதிமுறையான விசாரனைக்கு உட்படுத் தப்படாது கைவிடப்படவேண்டிய நிலைக்கு இட்டுச்செல் லும். இது நீதியின்பால் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. அத்துடன் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவல கத்தினால் செய்யப்பட்ட விண்ணப்பமும் பதிலின்றி கைவிடப்பட வரநேரிடுவதுடன், அந்நிறுவனம் உருவாக் கப்பட்டதன் சட்டப்பெறுமதியையும் கேள்விக்குறியாக்கு கின்றது. மேலும், சட்டரீதியாக இந்நீதிமன்றுக்கு ஒப் படைக்கப்பட்ட நீதிமுறையான கடமைகளும் மேற் சொல்லப்பட்டவாறு பெறுமதியற்றதாகக்கூடும். இத னடிப்படையில் நோக்கின், கௌரவ சட்டமாஅதிபர் எடுத்த தீர்மானமானது நீதியின்பால் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், 'கௌரவ சட்டமா அதிபரின் அதிகா ரத்துக்கு அப்பாற்பட்ட முடிவு' எனவும், உரிய கௌரவத் துடனும், மனவருத்தத்துடனும் இந்நீதிமன்றம் தெரிவித் துக்கொள்கின்றது.

*(மிகுதி அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்ஸ் அப் தாத்தாவும் பேஸ்புக் பேத்தியும்



**தாத்தா :** என்ன? காலமை கொம்மாவும் நீயும் ஒண்டா ஸ்கூட்டியிலை போனியள். இப்ப நீ மட்டும் தனிய வாறாய். கொம்மா எங்கை?

**பேத்தி :** அவ கன நாள் கோயிலுக்குப் போகேல்லையாம். இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை கொஞ்சம் லீவாம். அதுதான் போயிருக்கிறா.

**தாத்தா :** அப்ப கடவுளைப் பாக்கவும் உங்களுக்கு லீவு கிடைக்கவேணும். என்ன? சரி...சரி. இனிமேல் எங்களுக்கு நேரமில்லை. ஒருக்கா வந்து சந்தியுங்கோ. எண்டு கடவுளிட்டைச் சொல்லாட்டிச் சரி. காலம் மாறிப்போச்சுது?

**பேத்தி :** தாத்தா! நான் கொஞ்ச நேரம்தான் நிற்பன். போய் அம்மாவை ஏத்தவேணும். கேக்கிறதைக் கேளுங்கோ.

**தாத்தா :** இண்டைக்கு உங்கடை பக்கத்தைப் பற்றித் தான் கதை. பேப்பரிலையும் வாசிச்சனான். பல்கலைக் கழகத் துணைவேந்தர் தெரிவுக்கு என்ன நடந்தது?

**பேத்தி :** கவுன்சிலிலை தெரிவு நடந்து. இப்ப மூண்டு பேரைத் தெரிவு செய்திருக்கினம். அதுக்குப் பிறகு வழமையாக அதைப் பற்றித்தானே பேஸ்புக்கிலை அடிபிடி? அவன் சரி இல்லை. இவன் சரி இல்லை. பதவிக்குப் பொருத்தமானவன் இல்லை. தெரிவிலை அரசியல் கலந்து போச்சுது. வியாபாரியைத் தெரிஞ்சு போட்டினம். சோம்பேறியைத் தெரிஞ்சு போட்டினம். திருப்பியும் கம்பஸ் கீழை போகப்போகுது எண்டு தான் இப்ப கதை.

**தாத்தா :** நீ சொல்லேக்கைதான் துரைராசற்றை ஞாபகம் வருகுது. அந்நாள் இருந்த காலம் சண்டைக்காலம் எண்டாலும் அது ஒரு பொற்காலம். எனக்கு வடிவாத் தெரியும்.

**பேத்தி :** உதைத்தான் லோயர் ஒருத்தர் தன்ரை பேஸ்புக்கிலை இப்பிடிப் போட்டிருக்கிறார்.

"நேற்றுத் தேர்தல் முடிந்து மூவரது பெயர்கள் ஊடகங்களில் கசிந்த பின்னர் ஒரு கருத்தினை எழுதியிருந்தார். "ஒவ்வொருமுறையும் புதியவர் வரும் போது இதற்கு முந்தையவரே பரவாயில்லை என்ற உணர்வு பெரிய பாடசாலையில் தொடர்கதையாவது நிச்சயம்." இது ஓர் ஆழமான கருத்தாகவே தெரிகிறது. அதாவது ஒவ்வொரு முறையும் நிர்வாகத் தலைமையின் திறன் முன்னரைவிடக் குறைந்து செல்கிறது என இதனை விளங்கிக் கொள்ளலாம்.

**தாத்தா :** அவர் போட்டிருக்கிறது நூற்றுக்கு நூறு உண்மை. அப்ப அதை உப்பிடி விடுகிறதோ? பல்கலைக் கழகத்திலை அதின்ரை செயற்பாட்டிலையோ ஆருக்கும் அக்கறையோ இல்லையோ? ஒரு பெரிய கல்வி நிறுவனத்தை சங்கக்கடையை மாதிரித்தான் நடத்தப்போகினமோ?

**பேத்தி :** இல்லை தாத்தா. நீங்கள் நினைக்கிறமாதிரி இல்லை. இப்ப நான் வாசிக்கிறதையும் கேளுங்கோ. என்ன நடக்கப்போகுது எண்டு அப்ப தெரியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவுச் செயன்முறையில் ஏற்பட்டுள்ள நம்பகத்தன்மை வீழ்ச்சி தொடர்பான அவசர மேன்முறையீடு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கான தெரிவுச் செயன்முறையின் நம்பகத்தன்மையை, அதில் இடம் பெற்ற கடுமையான முறைகேடுகள் மீட்க முடியாத அளவிற்குப் பாதித்துள்ளன. மதிப்பீட்டுச் செயன்முறையின் போது பின்வரும் குறிப்பிட்ட விதிமீறல்கள் இடம்பெற்றுள்ளன:

1. பக்கச்சார்பு மற்றும் தடை ஏற்படுத்தல் உள்ளகப் பேரவை உறுப்பினர் (Internal Council Member) ஒருவர், விஞ்ஞான பீடாதிபதி (Dean of the Faculty of Science) தனது வேட்புமனு தொடர்பான விளக்கக் காட்சியை (presentation) வழங்குவதைத் தடுப்பதற்குத் திட்டமிட்ட வகையில் முயற்சி செய்தார். இச்செயன்முறை மீறலைச் சீர்செய்ய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) தலையிட்ட போதிலும், பக்கச்சார்புடன் செயற்பட்ட குறித்த உறுப்பினர் தொடர்ந்து மதிப்பீட்டுக்குழுவில் அங்கம் வகித்தமையானது, முழுச் செயன்முறையையும் அடிப்படையிலேயே குறைபாடுடையதாகவும் நடுநிலைத் தன்மையற்றதாகவும் மாற்றியுள்ளது.
2. மதிப்பீட்டாளர்களைக் கட்டாயப்படுத்தல் நெறிமுறைகளின் பெரும் மீறலாக, இந்துக் கற்கைகள் பீடாதிபதி (Dean of the Faculty of Hindu Studies), வெளிப்புற அவதானிகள் வருகை தருவதற்கு முன்னதாக உள்ளக உறுப்பினர்களால் அச்சுறுத்தலுக்கு உள்ளானார். அவர் மதிப்பீட்டுக் குழுவிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும், இல்லையேல் விளக்கக்காட்சி மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறைகள் இடைநிறுத்தப்படும் என அவருக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதன் விளைவாக, அவர் நிர்ப்பந்தத்தின் பெயரில் வெளியேற வேண்டியதாயிற்று. இதனால் அவரது நியாயமான பங்களிப்பு மதிப்பீட்டுக் குழுவிற்கு மறுக்கப்பட்டது.
3. ஊழல் மற்றும் முறையற்ற செல்வாக்கு மதிப்பீட்டுப் புள்ளிகள் புள்ளிவிபர ரீதியாக நியாயப்படுத்த முடியாத முரண்பாடுகளைக் (statistically indefensible outliers) கொண்டுள்ளன. இது முடிவுகள் திட்டமிட்டுத் திரிபுபடுத்தப்பட்டமையைச் சுட்டிக்காட்டுகின்றது. இப்புள்ளி வழங்கல் முரண்பாடுகளானது, பேரவை உறுப்பினர்களின் வாக்களிக்கும் நடத்தையில் முறையற்ற செல்வாக்கைச் செலுத்தும் நோக்கில் அவர்களுக்காக ஒழுங்குசெய்யப்பட்ட அனுமதிக்கப்படாத விருந்துபசாரம் (unauthorized hospitality) தொடர்பான நம்பகமான தகவல்களுடன் ஒத்துப் போகின்றன.

நடவடிக்கைக்கான கோரிக்கை இந்த முறைகேடுகளால் தற்போதைய மதிப்பீட்டுச் செயன்முறை முற்றாகக் கறை படிந்துள்ளது. ஸ்தாபனத்தின்மீதான பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க, தற்போதைய மதிப்பீட்டு நடவடிக்கைகளைச் செல்லுபடியற்றதாக (null and void) அறிவிக்குமாறும், வெளிப்படைத்தன்மையையும் தகுதியையும் (meritocracy) உறுதிசெய்யும்வகையில் கடுமையான ஏற்பாடுகளுடன் புதிய விண்ணப்பங்களைக் கோருமாறு பல்கலைக்கழகத்திற்குப் பணிக்குமாறும் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடம் அவசரமாகக் கோருகின்றோம்.

தாத்தா : சபாஷ். உது சரியான நெத்தியடி. அப்ப எங்கடை சமூகத்துக்குள்ளையும் ரோசமுள்ளவை இருக்கிறாங்கள். உப்பிடி ஒருத்தன் பொறுப்போடை சிந்திக்கிறமாதிரி எல்லாத் துறையிலையும் எல்லாரும் சிந்திச்சால் நாங்கள் நிமிர்ந்திடுவம்.

# உணர்ந்திடும்

பாகம் 3

○ இராகவன்

சிவராத்திரியெண்டு கனகராஜ வளவுப் பரமானந்தப் பிள்ளையார் கோயில்ல இளையண்ணா 'உதயகீதம்'படமோடுறதுக்குப் பிளான் பண்ணிப் படக்கொப்பி எடுத்துவந்தும் பக்திப்படங்கள் ஓடி முடியிறதுக்குள்ள, விடியத்தொடங்கிட்டுது. அதால அந்தப் படம் ஓடேலை. அதால அப்பவும் கைக்கெட்டினது வாய்க்கெட்டேல்ல எண்ட கதையாய் உதயகீதம் பாக்க எனக்குச் சான்ஸ் கிடைக்கேலை. பிறகு உந்த டிவிடி சிஸ்ரம் வந்தாப் போல தான் எனக்கு அந்தப் படத்தைப் பாக்கச் சான்ஸ் கிடைச்சுது. அதில அந்தத் தேங்காய்க்குள்ளை வெடிகுண்டுப் பகிடி வரேக்குள்ள குமுதினி ரீச்சரின்ரை ஞாபகம் தான் வந்தது. அவா சிவன்ரை வீட்டில ஒரு மாதத்துக்குக் கிட்ட நிண்டிருப்பா. அந்தளவு நாளும் எனக்குக் கொண்டாட்டம் தான்.

அவா நல்லாப் புத்தகங்கள் வாசிப்பா. அப்ப நானும் கொஞ்சம் லைற்றா புத்தகங்கள் வாசிப்பன். அப்பவே நான்நெல்லைக.பேரன்எழுதினசிறுகதையெல்லாம் வாசிச்சிருந்ததாலை அவாவிட்ட அதைப் பற்றிக் கதைக்கேக்குள்ளை "எட இந்த வயதில நீ நெல்லை க.பேரனின்ர சிறுகதையள் வாசிச்சு விளங்கிக் கதைக்கிறது எனக்கு வலு சந்தோசமாயிருக்கு. நீ கெட்டிக்காரன் தான்" எண்டு முதுகில தட்டிப் பாராட்டினா. அந்த நேரத்தில தான் அவா நெல்லை க.பேரன் உமாமணாளன்,ராஜிவிஜி எண்ட பெயருகளில எழுதிற தகவலையும் சொன்னா. அதைவிட நான் லக் ஷ்மி, சிவசங்கரி, அனுராதாரமணன், தமிழ்வாணன், தேவிபாலா, சுபா, ராஜேந்திரகுமார், ராஜேஷ்குமார், பட்டுக்கோட்டை பிரபாகர், சுஜாதா, புஸ்பாதங்கதுரை எண்டு பலரையும் வாசிக்கிறதைப் பற்றியும் அவவோட கதைச்சன். அதுக்குப் பிறகு சிவன் என்னில ஒரு பொறாமைப்படுகிற அளவுக்கு குமுதினி ரீச்சர் என்னொட நெருக்கமாகிவிட்டா.

57

இந்தப் புத்தகங்களையெல்லாம் லைப்பிரறியில எடுத்து வாசிக்காமல் சொந்தமாய் வாங்கி வாசிக்கிறன் எண்டு நான் சொன்னதைக் குமுதினி ரீச்சரால நம்பமுடியாமலிருந்தது. இந்தப் புத்தகங்களைத் தவிர நான் ஞானபூமி, கல்கி, குமுதம், ஆனந்தவிகடன், பொம்மை, பேசும் படம், ஜெமினி சினிமா, ரத்னபாலா, பாலமித்ரா, அம்புலி மாமா, நவரத்தினம் எண்டு ஒரு தொகைச் சஞ்சிகைகளை வைச்சிருக்கிறன் எண்டும் அவவிட்டைச் சொன்னன். அவவுக்கு அது இன்னும் வியப்பாயிருந்தது. "போடா! நீ கண்ட பாட்டுக்குப் புளுகிறாய்!" எண்டா. அப்ப பக்கத்தில நிண்ட சிவன் "இல்லையில்லை! உவன் உண்மையாய் வைச்சிருக்கிறான் ரீச்சர். நான் பாத்தனான்" எண்டு அவவிட்டைச் சொன்னப்போல "அப்ப நான் ஒருக்கால் உன்ரை வீட்டை வந்து பாக்கப்போறன்" எண்டுசொன்னா. எனக்கு அதைக் கேட்டாப் போலை நல்ல புளுகு. "அதுக்கென்ன இப்பவே வாறீங்களோ?" எண்டு கேட்டான். "இப்ப எனக்கு நேரமில்லை வேறை வேலையிருக்குது. நாளைக்கு வாறன்" எண்டு சொன்னா. பிறகு வரேல்ல. அவ சிவன்ர வீட்டிலை இரவு நிண்டுட்டு பகல்ல தன்ர வீட்டை போய்ப் பிறகு ரியூசனுக்கும் போகிட்டுத் திரும்பிவர இருண்டு போகும். இப்பிடியே குமுதினி ரீச்சர் என்ர வீட்டை வாறது தள்ளித்தள்ளி இழுபட்டுக் கொண்டுபோய்க் கடைசியில் நடக்காமலே போச்சுது. அதுக்கிடையில இயக்கம் கோட்டையைப் பிடிச்சு "பறக்குதடா! யாழ் கோட்டையிலே எங்கள் புலிக் கொடி! பகைவனிடம் போய்ச் சொல்லுங்கள் இது தான் முதலடி!" எண்டு தேனிசைச் செல்லப்பா பாட்டெல்லாம் பாடினதோடை அந்தச் சண்டையும் முடிஞ்சு குமுதினி ரீச்சர் தன்ரை வீட்டுக்கு நிரந்தரமாய்ப் போகிட்டா.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org